www.akaram.eu

# AKARAM
# அகரம்

இலவச தமிழ் மாத இதழ்

சுவடி : 9.06 திருவள்ளுவர் ஆண்டு 2052 | 14.12.2021 - 13.01.2022 | ISSN : 2195-6480


FREE Magazine

## ஈழமக்களின் உணர்வுகளில் தீயை வைக்கலாமா?

வாசகர்கள் மற்றும்
விளம்பரதார பெருமக்கள்
அனைவருக்கும் நத்தார், புதுவருடம்,
தைப் பொங்கல் நல்வாழ்த்துகள்




## தாங்குமா உலகம்? ஒமிக்ரோன்



## அம்பலமாகும் இலங்கை அரசியல் களங்கள்



Dortmund மாநகரில் மளிகை உலகின்
BIGG BOSS
மலிவும் தரமும்
என்றும்
உங்கள் TKS
வாடிக்கையாளர் மற்றும்
நண்பர்கள் அனைவருக்கும்
நத்தார், புதுவருடம்,
தைப் பொங்கல்
நல்வாழ்த்துகள்
TKS
BEST FOODS
விழாக்கால சலுகை
100€ க்கு மேல்
கொள்வனவு செய்பவர்களுக்கு
V BOX
~~149€~~
பெறுமதியுள்ள
99€ கிடைக்கும்
7 ஆம்
ஆண்டுக்கான
விழாக்கால
பிரமாண்ட
விற்பனை
Rheinische Str.79-44137-Dortmund
tksbestfoods
0049 231 950 468 83
www.tksbestfoods.de
tks-bestfoods@web.de

ortel MOBILE

TREUE BONUS 2)



SMART WORLD

## 20 countries
## 250 minutes

250 minutes from Germany to 20 countries

250 minutes from Germany to Eu

Internet Flat Highspeed up to 8GB

Surf and make calls within the EU

National Flat call rate

Now for 4weeks for "

**19,99€***

# OHNE PAUSE NACH HAUSE.




Ortel. Wir sprechen Deine Sprache.

Google play · Available on the App Store

Aufladbar mit: ortel MOBILE, O2, e-plus

Ortel Mobile GmbH, E-Plus-Straße 1, 40472 Düsseldorf. Nutzungsvoraussetzung: Erwerb eines Starterpaket (UVP 9,95 €). Standardtarif: Innerdeutsche Gespräche: 9 Cent/Min., Gespräche ins Ausland ab 1 Cent/Minute. Gespräche jeweils zzgl. einmaliger Verbindungsgebühr von max. 15 Cent je Gespräch möglich (alle Preise unter www.ortelmobile.de). SMS 15 Cent. 49 Cent/MB. 60/60 Taktung. Nicht gültig für Sonderrufnummern. Datengeschwindigkeiten innerhalb Deutschlands und in der EU von bis zu 21,6 MBit/s (Download) und 8,6 Mbit/s (Upload). Bei den angegebenen Geschwindigkeiten handelt es sich um die jeweils technisch mögliche Maximalgeschwindigkeit. Die tatsächlich erreichte Durchschnittsgeschwindigkeit kann davon abweichen. Taktung 100 KB Schritte. 1) World Flat (24,99€ pro 28 Tage Optionslaufzeit zubuchbar zum Standardtarif): Unbegrenzte Minuten aus Deutschland in die EU, sowie Gespräche aus Deutschland in alle Netze von Bangladesch, Brasilien, Chile, China, Hongkong, Indien, Indonesien, Japan, Kanada, Malaysia, Puerto Rico, Singapur, Südkorea, Thailand, USA sowie in die Festnetze von Kasachstan, Russland, Slowenien. Dazu eine Flatrate für Gespräche in alle deutschen Netze. Dies gilt auch für Telefonate innerhalb der EU und aus der EU nach Deutschland. 60/60 Taktung. Nicht gültig für Sonderrufnummern. Außerhalb der Inklusivleistung gelten die üblichen Konditionen Ihres Tarifs. Die Verlängerung erfolgt bei ausreichendem Guthaben automatisch, wenn die Option nicht zum Ende der jeweiligen Laufzeit gekündigt wird. 2) Verlängerung 19,99 €/28 Tage.



AKARAM
அகரம்

மாதாந்த இதழ் Monthly Magazine

14 கார்த்திகை 2021 - 13 மார்கழி 2021
சுவடி / ISSUE 9.06

**தலைமை ஆசிரியர்**
திரு. **த. இரவீந்திரன்**

**உதவி ஆசிரியர்**
திரு. **வன்னித்தம்பி**

**ஆசிரியர் குழு**
திரு. பவித்திரன் (இலங்கை)
திரு. தயாபரன் (இலங்கை)
திரு. எதிர்மன்ன சிங்கம் (சுவிஸ்)
திரு. சண் தவராஜா (சுவிஸ்)
திரு. அறிவழகன் (ஜெர்மனி)
திரு. கண்ணன் (இந்தியா)

**நிழற்படப் பிரிவு**
திரு. வியாசன்
செல்வி. கயல்விழி

**ஒப்பு நோக்குனர்**
திரு. அர்ஜுன் (ஜெர்மனி)

**தொடர்புகளுக்கு**

European Tamils Union e.V.
PO. Box 13 06 31,
44316 Dortmund,
Germany

Tel: 00 49 176 47 11 87 11
Email: editor@akaram.eu

ISSN 2195-6480
www.akaram.eu

No part of this publication may be reproduced, copied or transited in any form or by any means or stored in any information storage or retrieval system without the publisher's written permission.

©ETU e.V. 2014.
All rights reserved.

# நுழைவாயில்...

**அகரம் வாசக அன்பர்களுக்கும், விளம்பரதார வள்ளல் பெருமக்களுக்கும் வரப் போகும் நத்தார் ஆங்கிலப் புதுவருடம், தமிழரின் தைப் பொங்கல் விழாக் கால வாழ்த்துகளை முன்னதாகவே அகரம் தெரிவிப்பதில் பெரு மகிழ்ச்சி கொள்கிறது.**

பொங்கும் இன்பம் எங்கும் நிறைந்து, எல்லா மக்களும் நிறைவான மகிழ்வான வாழ்வை அனுபவிக்க, பிறக்கப் போகும் 2022 ஆம் ஆண்டு எல்லா நலங்களையும், வளங்களையும் அள்ளித்தர ஆண்டவன் அருள் பாலிப்பாராக!.

பழைய வருட கசப்பான அனுபவங்களும், கொரோனா நோய்ப் பெருந்தொற்றின் பயங்கர அனுபவங்களை மக்கள் அறவே மறந்து புதுத் தென்பும், மகிழ்ச்சியும் அனைவரின் புது வருடச் சங்கற்பமாகப் பற்றிக் கொள்ள 'அகரம்' வாழ்த்துகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவீரர் நினைவு நாளை இலங்கை, இந்திய அரசுகள் தமிழ் மக்களை விடவும் அதிக கவனம் செலுத்தும் வகையில் கொண்டாடிய செய்திகளை ஊடகங்களில் காண முடிந்தது.

இலங்கை அரசு தமிழ் மக்கள் புலிகளின் மாவீரர் நாளை மறக்கச் செய்ய, மறக்காமல் பல தடை உத்தரவுகளைப் பல்வேறு நீதிமன்றங்களிலும், காவல்துறை மூலம் தடைகளையும், கைதுகளையும் செய்து சிறப்பித்தது.

அதே வேளை அதன் கூட்டாளியான இந்திய அரசின் தூதுவரும், யாழ் துணைத் தூதுவரும் மாவீரர் நாளை யாழ்ப்பாணத்தில் உள்ள விடுதலைப் புலிகளின் கேணல் கிட்டு அவர்களின் நினைவுப் பூங்காவில், புலிகளின் நினைவு மலரான காத்திகைப் பூ மலர் அணிந்து கொண்டாடினர் என்கிற அதிர்ச்சி தரும் செய்திகளையும் படித்தோம்.

இதில் சிறப்பு என்னவென்றால், கொழும்புக் கிளையின் தலைமைத் தூதுவரும், யாழ்ப்பாணக்

கிளையின் துணைத் தூதுவரும் இணைந்து அந்நிகழ்வைச் சிறப்பித்தனர் என்கிற விபரம் நம்ப முடியாத ஒன்றாக அமைந்து விட்டது. காலம் எப்படி எல்லாம் மனிதர்களையும், உலக அரசுகளையும் மாற்றி விடுகின்றன என்பதை நினைத்தாலே தலையைச் சுற்றுகிறது.

இலங்கை, இந்திய அமெரிக்க அரசுகள் மீண்டும் 2008ஆம் ஆண்டுக்கால கட்டத்தில் புலிகளை அழிக்க இணைந்து செயற்பட்டது போன்ற நிலைக்குத் திரும்பி விட்டதையே சுமந்திரன், சாணக்கியன் ஆகியோரின் அமெரிக்க, கனேடிய அரசியல் பயணங்கள் காட்டுவதாகவே பார்க்கப்படவேண்டும்.

இதில் முக்கியமான சூத்திரதாரியான இந்தியாவின் தலையீடு இல்லாமல், ஈழத் தமிழர்களின் முக்கிய அரசியல் தலைவனாக ஐ.தே.க.வின் ஆயுட்கால உறுபினரான சுமந்திரன் இருக்க முடியாது. குறிப்பாகக் கடந்த இரு பாராளுமன்றத் தேர்தல்களிலும் அவருக்கு நியாயமாகக் கிடைத்த மக்களின் வாக்குகளின் அடிப்படையில் அவர் தேர்வாகி இருக்க முடியவே முடியாது.

இவரைப் போன்ற பல நிழல் தலைவர்களின் பட்டியலில் மறவன் புலவு சச்சிதானந்தன், சந்திரகாசன், காசி ஆனந்தன் ஆகியோர் இருக்கும் வாய்ப்புகளே அதிகம் உள்ளன. இந்தப் போட்டியில் இலங்கை, இந்திய அரசுகளின் போட்டியும், அமெரிக்கா சீனாவின் மூக்குகளும் காணப்படும். இப்போ நாம் காண்பது படத்தின் முன்னோட்டங்கள்தான். 'மெட்ராஸ் கஃபே',' பமிலி மான் 2' போன்ற பல வெற்றிப் படங்களைத் தர விஜய் சேதுபதி, சமந்தா போன்ற பல பிரபல நட்சத்திரங்கள் தயாராகவே உள்ளனர்.

அவர்களை எல்லாம் விட, எமது தாய் மண் மீட்புப் போராட்டம் உலக அரங்குகளில் புத்துணர்ச்சியுடன் எமது இளம் தலைமுறை மிக வலுவாகவும், உறுதியாகவும் இறுதி இலக்கை அடையும் வரை தொடர வேண்டும் என்பதே அகரம்இதழின் அழியாத ஆசை.

"எமது இளம் தலைமுறை சாதித்துக் காட்டும்என்பதில் எமக்குத் துளியும் ஐயமில்லை."

அன்புடன் மீண்டும்
சந்திக்க விளைளுயும்,

ஆசிரியர், அகரம் குழுமம்



▶▶ த. எதிர்மன்னசிங்கம்





# அம்பலமாகும் இலங்கை அரசியல் களங்கள்

## எச்சரிக்கை!

## இந்தியாவின் பார்வை மீண்டும் எம் பக்கமா?

யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகள் தளபதி கிட்டு நினைவுப் பூங்காவில் இந்தியத் தூதுவருக்கும், வடபகுதி இந்தியத் துணைத் தூதுவருக்கும் என்ன வேலை? அதுவும் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் வாகை மலரான செங்காந்தள் எனப்படும் கார்த்திகை மலர் அணிந்து, பொது நிகழ்வை நடத்த வேண்டிய கட்டாயம் என்ன?

ராஜீவ் செய்த இராணுவ ரீதியான அமைதிப் பணியை மோடியும் செய்ய எண்ணுகிறாரா? வழமைபோலத் தமிழ் அரசுக் கட்சியும், அதன் கொலைகாரக் கூட்டங்களும் தம் அடிமை அரசியலைத் தொடர்கின்றன. அதன் வெளிப்பாடாக அமெரிக்காவின் அழைப்பின் பேரில் சுமந்திரன் தன் கைத்தடியுடன் அமெரிக்கா சென்று, அங்கிருந்து கனடாவுக்கும் சென்று, தமது கடையைப் போட முனைந்து முகத்திரை கிழிக்கப் பட்ட காட்சியை இந்த இணைய இணைப்பில் காணலாம்.

*<https://m.youtube.com/watch?time_continue=29&v=Py2BK1o9uY&feature=emb_logo>*

சம்பந்தன் பூரண ஓய்வில் இருக்க வேண்டியக் கட்டாயத்தில் அவரது உடல் நலம் உள்ளதாகச் செய்திகள் கூறுகின்றன. அதனால் சம்பந்தன் இல்லாத சுமந்திரன், இராமன் இல்லாத அநுமனாக இரண்டு இடங்களிலும் தமிழ் மக்களிடம் எதிர்ப்பை வாங்கிக் கட்டிக் கொண்டுள்ளார். அந்த மானத் தமிழ் மக்களை அகரம் மனதார வாழ்த்தி வணங்குகிறது. அவர்களைப் போன்றவர்களால்தான் உலகத் தமிழ் மக்களின் திறமையும், ஈழத் தமிழ் மக்களின் தாயக மீட்புப் போராட்டமும் வெற்றிகளைக் குவிக்க முடியும்.

ஒரு புறத்தில் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்ஷங்கர் அமெரிக்காவில் நின்ற பொழுது, இலங்கையில் இருந்த பசில் ராஜபக்ஷ அமெரிக்கா அழைக்கப்பட்டு, 600 மில்லியன் அமெரிக்க டாலர் கடன் வழங்கி, வழியனுப்பி வைக்கப் பட்டார். அவர் நாடு திரும்பியதும், திரிகோண மலைத் துறைமுக ஒப்பந்தம் கைச்சாத்தானது.

இப்பொழுது சுமந்திரனும், சாணக்கியனும் அமெரிக்க அழைப்பில் போய் சந்தித்து விட்டு, அங்கிருந்து கனடா சென்று, அங்குள்ள தமிழ் மக்களின் எதிர்ப்பைப் பெற்றுள்ள நிலையில், இந்தியாவின் இன்னொரு செல்லப் பிள்ளையான திரு. ஜீவன்

கூலே யாழ்ப்பாணத்தில் இன்னொரு நாடகத்தை நடத்தி முடித்துள்ளார். அவர்களுடைய பணி இந்தியாவைக் குளிர வைக்கவா? அல்லது அமெரிக்காவைக் குஷிப் படுத்தவா? என்பது தெரியவில்லை. கத்தரிக்காய் முத்தினால் சந்தைக்கு வரத்தானே வேண்டும். 1987 இல் வந்த இந்தியக் கத்தரிக்காய் புழுக் குத்தல் எனத் தெரிந்து கொள்ள, பல்லாயிரம் தமிழ் உயிர்களைப் பலி கொடுக்க வேண்டியதாயிற்று. எனவே, இந்தச் சரக்கும் அது போன்ற ஒன்றாக இருக்கும் என எமது உள்ளுணர்வு எச்சரிக்கிறது.

எல்லா வீதிகளும் ரோமா புரியை நோக்கிச் செல்கின்றன என்பது போல, இந்நிகழ்ச்சிகள் அனைத்தும் இந்தியாவை நோக்கியதாகக் காணப்படுகின்றன. அது போன்ற சம கால நிகழ்வு ஒன்றை யாழ்ப்பாணத்தில் திரு.ஜீவன் கூலே தமது இல்லத்தில் அரங்கேற்றி உள்ளார்.

திரு.கூலே இந்தியாவின் செல்லப் பிள்ளை என்பதை, 1987 தொடக்கம் அவர் கண்ட வளர்ச்சியும், புகழும் எந்த ஈழத் தமிழனுக்கும் இலேசாக கைவரக் கூடியவை அல்ல. அவரது குடும்பப் பின்னணியும், மதமும் எவரையும் பொறாமைப்பட வைப்பவை. அவரது மனித உரிமைச் செயற்பாடுகள் மகிந்த ராஜபக்ஷவின் பழைய காலத்தை நினைவுபடுத்தச் செய்வன.

அவர் இலங்கைத் தேர்தல் ஆணையத்தின் 3 உறுப்பினருள் உள்ள ஒரே தமிழர் என்பது, எம் இனத்தைப் புளகாங்கிதம் அடையச் செய்வன. அவருக்கு எல்லாப் பெருமைகளையும் வரமாகத் தரும் கரங்கள் இந்திய உளவு அமைப்பிடம் உள்ள விபரம் பரகசிய உண்மை. தேர்தல் ஆணைச் சபை உறுப்பினர் பதவி அவருக்குத் தானாக வந்தது என்றால், அப்படியான அதிசயங்கள் எந்த நாட்டு அரசியலிலும் காணமுடியாது. எப்படியோ அவரது இந்தப் பதவி இலங்கை அரசின் யோக்கியதைக் கருதி வழங்கப்பட்டதாக ஏற்க அகரம் தயாராக இல்லை.

எப்படியோ அந்தப் பதவியை வைத்து, இன்றைய அதிபர் நந்தசேன கோட்டபாயாவை பதவி இறக்குவேன் எனும் அளவுக்குச் செயற்பட நாட்டில் எவருக்கும் தைரியம் இல்லை. அதுவும் இலங்கையின் ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவரை தமது இல்லத்திற்கு அழைத்து, அவரைச் செய்தி நாயகனாக காட்டும் திரு.கூலேயின் தைரியத்தை அகரம் வரவேற்கிறது.

அண்மையில் நல்லூரில் உள்ள தமது இல்லத்தில் ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் டெனிஸ் சைபீ ( ***EU Ambassador Denis Chaibi***) அவர்களை அழைத்து வரவேற்கும் காட்சியும் திரு.கூலேயின் உபயம்தான்.

திரு. ஜீவன் கூலே இலங்கை தேர்தல் ஆணையத்தின் 3 உறுப்பினர்களில் ஒருவராக உள்ளார். இலங்கையில் நடக்கும் எல்லா ஜனநாயக தேர்தல்களையும், சட்ட வரையறைகளுக்குள் நெறிப்படுத்தி நிறைவேற்றும் கடப்பாடு இலங்கைத் தேர்தல் ஆணையத்துக்கும், அதன் தலைவர் தேர்தல் ஆணையருக்கும் உள்ள தன்னாதிக்க கடமைகள் என அரசமைப்புச் சட்டங்கள் சொல்லத் தவறுவதில்லை.

ஆனால், வலது கையால் கொடுத்து விட்டு, இடது கையால் எடுப்பதற்கு வசதியாக அதே சட்டத்தின் உப- பிரிவுகள் மூலம் ஓட்டைகளை வைத்து விடுவார்கள். அதனால்தான் விசயம் தெரிந்தவர்கள் ‘சட்டம் ஒரு கழுதை. அதனை முன்னால் இழுத்தால், பின்னால் வரும். பின்னால் போனால் காலால் உதைத்துத் தள்ளி விடும்’ என்கிறார்கள். இந்தச் சூட்சுமத்தைத் தெரிந்து வழக்காடும் வக்கீல்கள் எல்லா வழக்குகளிலும் வெற்றிகளைக் குவித்து, புகழ் அடைகிறார்கள். மற்றவர்கள் வெறும் வறுத்த கச்சானை சப்பி காலத்தை ஓட்டுகிறார்கள்.

இவர் இந்திய அரசின் பூரண ஆதரவு பெற்றுத் தமிழீழ புலிகளை எதிர்த்து, மனித உரிமை அரசியல் (?) செய்பவர். அதனால் இன்றும் தமிழீழ விடுதலைப் புலிகளையும், தமிழ்த் தேசிய அரசியலையும் தீவிரமாக எதிர்த்து வருபவர். ஆனால், இப்பொழுது அவர் பஜனை வேறாக ஒலிப்பதை இப்போது கவனிக்கலாம்.

இந்திய அரசின் வலது கரமாக இயங்கும் இவர், இலங்கை தேர்தல் ஆணைக்குழுவின் 3 உறுப்பினரில் ஒரே தமிழர். மனித உரிமைச் செயற்பாட்டாளர் என்கிற கோதாவில், கோட்டபாயா ராஜபக்ஷவின் அதிபர் தேர்தல் விடயத்தில் அவரது அமெரிக்க குடி உரிமை தொடர்பான சர்ச்சையில் ஈடுபட்டு, இலங்கை அதிபர் தேர்தல் அரசின் சட்டங்களுக்கு முரனானது என்கிற நிலைப் பாட்டில் உறுதியாகச் செயலாற்றி வருகிறார்.

அண்மையில் நல்லூரில் உள்ள தமது இல்லத்தில், ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் டெனிஸ் சைபீ ( ***EU Ambassador Denis Chaibi)*** அவர்களை அழைத்து, "தமது உண்மையான கருத்துப் படி எப்படிப் பட்ட இராணுவ பொலிஸ் ஆட்சியில் பாரிய நெருக்கடிகள் நிறைந்த வாழ்வை சட்டப் படியான எந்தவித பாதுகாப்பும் அற்ற வாழ்வை வாழ்கிறோம்" என முறையிட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

மேலும் அவர், "அமெரிக்க அரசு எம்மீது ஒரு பழமைவாத விளையாட்டுச் சூழலை ஏற்படுத்தி, ஒருவரை நாட்டின் அதிபராகத் தெரிவாக உதவி உள்ளது. அதிபர் பதவிக்கு தகுதியற்ற ஒருவர், அவரது அதிபர் தேர்தல் தொடர்பாக திரு.நாகேந்திர கொடி துவக்கு என்பவர், இலங்கை உச்ச நீதி மன்றத்தில் தொடர்ந்த வழக்கு நிலுவையில் உள்ளது. அந்த வழக்கை வலுவான சுதந்திரமான 5 நீதிபதிகளைக் கொண்ட அமர்வில் விசாரிக்கப்பட வேண்டும்" என அவர் கேட்டுள்ளார். 'தலைமை நீதியரசர் அதனை அனுமதிப்பார் என நான் நம்புகிறேன்' எனவும் கூறுகிறார்.

அரச அதிபர் தேர்தலுக்கு முன்னர், இப்பொழுது மேன்மை தங்கிய அதிபரான கோட்டபாயா ராஜபக்ஷ அன்றைத் தினத்தில் திருவாளர் ராஜபக்ஷ ஒரு வேட்பாளராக தேர்தல் ஆணையகத்துக்கு வந்திருந்தார்.



அங்கே 3 உறுப்பினரில் ஒருவனாக நானும் இருந்தேன். அப்பொழுது கொழும்பு அமெரிக்கத் தூதரகம் வழங்கியதாக ஒரு ஆவணத்தைக் கொடுத்து, தான் அமெரிக்க குடி உரிமையைக் கையளித்து விட்டதாக அறிவித்தார். அரசமைப்புச் சட்டத்தின் பிரகாரம் இரட்டைக் குடி உரிமை கொண்ட எவரும் அரச அதிபர் பதவிக்குத் தேர்தலில் போட்டி இட முடியாது.

எனக்குத் தெரிந்த அமெரிக்கத் தூதரக நபர்களிடம் விசாரித்த பொழுது, அவர்களிடம் இருந்து வந்த பதில் , "அது உண்மையாக இல்லாது போனால், நாம் அப்படி ஒரு




யேர்மன் நாட்டில் ஆடைகளின் ராணி நவநாகரீகத்தில் மகாராணி
Jasmine Silk House
2022ஆம் ஆண்டின் புதிய டிசைன்களில், சாரி வகைகள், பஞ்சாபி வகைகள்,
சிறுவர்களுக்கான ஆடை வகைகள் மற்றும் அனைத்து கவறிங்
நகைகளையும் பெற்றுக் கொள்ளலாம்
வாடிக்கையாளர் மற்றும்
நண்பர்கள் அனைவருக்கும்
நத்தார், புதுவருடம்,
தைப் பொங்கல் நல்வாழ்த்துகள்
Fester Str.50, 40882 Ratingen
Tel : 021 028 447 44
Mob. : 0173 1937 325
எமது நிறுவனம்  திங்கள் முதல் சனிக்கிழமை வரை
காலை 10.00 முதல் மாலை 8.00 வரை திறக்கப்படும்

கடிதத்தை ஒரு பொழுதும் வழங்க மாட்டோம்" என்பதாகும். அந்தப் பதிலை வேட்பாளர்களோ அல்லது அரசியல் கட்சிகளோ ஏதாவது முறைப்பாடு செய்தால் மட்டுமே மேலதிக நடவடிக்கை எடுப்பதற்காக உச்ச நீதிமன்றத்தை நாடுவது என முடிவு செய்தோம்.

எந்த வித முறைப்பாடுகளும் கிடைக்காத நிலையில் திரு.ராஜபக்ஷ 09.11.2020இல் அதிபராகத் தெரிவு செய்யப் பட்டார்.

இப்பொழுது திரு. கொடிதுவக்கு அமெரிக்க அரசின் தேசிய பாதுகாப்பு கிளையின் சட்டம் கொள்கை கிளைத் தலைமை அதிகாரி வழங்கியதாக ஒரு அறிக்கையை எனக்கு அனுப்பி இருக்கிறார். அதனை இங்கே மீள் பதிவாக தருகிறேன்.

அந்த ஆவணம் உண்மையாக இருப்பதாக வைத்துக் கொண்டால், திரு.ராஜபக்ஷவின் அமெரிக்கக் குடி உரிமை ரத்து 09.11.20இல் பூர்த்தி பெற்றிருக்கவில்லை. எனவே, அவரது தேர்தல் செல்லுபடியாகாது. 11.நவம்பர் 2019 திகதி கொண்ட அமெரிக்கக் கடிதம் சம்பந்தப்பட்ட அமெரிக்க அதிகாரிகளை இது போன்ற ஆவணங்களோ, தகவல்களோ வெளிவராமல் தடுக்க எல்லா


U.S. Department of Justice

National Security Division
Law and Policy Section

TO: Director, Office of Overseas Citizen Services, Department of State

SUBJECT: **URGENT** Guidance on the denaturalization of Gotabaya Rajapaksa

FILE NO: 262-85981

DATE: November 11, 2019

LPS officers of the National Security Division are advised by Homeland Security Investigations (HSI) that the abovenamed naturalized U.S. citizen has begun, but not completed, a voluntary denaturalization process (INA 349(a)(5)) in order to contest a presidential election in Sri Lanka. Available records indicate that Gotabaya Rajapaksa ("RAJAPAKSA") initiated the renunciation process at the U.S. Embassy in Colombo on April 17, 2019, and his file was thereafter transmitted to the Near East and South and Central Asia Division (OCS/ACS/NESCA) for further processing and approval. A 'Certificate of Loss of Nationality of the United States' purporting to indicate OCS approval has been widely distributed online by election agents of RAJAPAKSA and featured in recent litigation in Sri Lanka.

According to HSI (refer encl.), the Department of Homeland Security has not received transmission of any request to denaturalize RAJAPAKSA from the Department of State. When HSI made informal inquiries from ACS officers (refer encl.) about the authenticity of the denaturalization certificate, they were advised that the status and all process points in connection with the RAJAPAKSA matter have been classified for reasons 1.4(d) and 1.4(c) per EO 13526.

This office is aware that public scrutiny of the RAJAPAKSA denaturalization matter and of the documents circulated online could jeopardise ongoing national security operations involving other government agencies. Steps have been taken to suspend HSI investigations, and you are thereby advised to take all possible steps to prevent any further dissemination of relevant documents or information until the resolution of this matter and you are advised of the conclusion of connected operations.

11 November 2019
Date

Christopher Hardee
Chief - Policy
Office of Law and Policy
National Security Division



சாத்தியமான நடவடிக்கைகளையும் எடுக்குமாறு கேட்டுள்ளது.

அந்தப் பயங்கரமான சூழல் பலமற்ற சிறுபான்மை இனமான தமிழர்களாகிய எங்களைத் தமிழ் மக்களுக்கும், தமிழர் தாயாகக் கோட்பாட்டிற்கும் பகையான சிங்கள அரசின் பயங்கரச் சூழலாக உள்ளது.

பொது நிலங்களை அரசு கைப்பற்றுகிறது. இந்துக் கோயில்கள் புத்த கோயில்களாக எடுத்துக் கொள்ளப் படுகின்றன. செம்மலை போன்ற ஆபத்தான எல்லைப் பிரதேசங்களில் ஆபத்தில் உள்ள கேயில்களைக் காப்பாற்ற நீதிமன்றங்கள் வழங்கும் தடை ஆணைகளைக் காவல்துறை எடுத்துச் சென்று வழங்கத் தவறுகின்றன. தேர்தல் ஆணையம் குழப்பங்களை ஏற்படுத்தும் புத்த பிக்குகளின் நடத்தைகள் பற்றி தேர்தல் ஆணையம் செய்யும் முறைப்பாடுகள் தொடர்பாக பொலிஸ் மா அதிபர் எதுவித நடவடிக்கையும் எடுப்பதில்லை. அவர்களுக்கு ஏதாவது தேவை என்றால், எடுத்துக் காட்டாக (கருணா அம்மான, ஸ்ரீரங்கா) போன்ற வர்களுக்கு எதிரான முறைப்பாடுகளைத் தேர்தலுக்குச் சற்று முன்னதாக எடுத்துச் செயற்படுத்துகிறார்கள்.

இவை போல இப்பொழுதும் யாழ்ப்பாணத்தில் இடம் பெறும் காவல்துறையின் மீறுதல்களால் மக்கள் படும் துயரங்கள் பற்றியும் குறிப்பிட்டு, ஐரோப்பிய ஒன்றியத்தின் கவனத்தைக் கோரி உள்ளார்.

'பசுவில் பால் கறக்கும் பொழுது, பால் குடத்தில் பசுவின் மூத்திரத்தின் துளி விழும்' என்கிற பழமொழி போல, தேர்தல் ஆணையத்தில் தேசியத்துக்காக உழைப்பவர்களில் இனவாதிகளும் உள்ளனர். இவை எல்லாமே எமது பிராந்திய ரவுடி மீண்டும் எங்கள் முதுகில் ஏறிச் செரிய முற்படுவதையே காட்டு கின்றன.

'பட்டது போதும் அவளாலே பட்டினத்தாரும் சொன்னாரே.! காசிக்குப் போகும் சந்நியாசி சரிதானா கொஞ்சம் நீ யோசி' என்கிற சினிமாப் பாடல் வரிகளை இவரது நடவடிக்கைகள் நினைவூட்டுகின்றன. எம்மைச் சுற்றிலும் நடப்பவைகளைக் காணும் பொழுது இந்திய அமைதிப் படையின் இருண்ட பக்கங்கள் மீண்டும் அச்சுறுத்துகின்றன.

# இலங்கையில் சமூக வலைத்தளங்களால் ஏற்படும் பாரதூரம்

ப்ரியமதா பயஸ்

இலங்கையின் வாழ்வியல் நிலைமை இப்போது மிக மோசமாக உள்ளது. கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள சமூகச் சீர்கேடுகள் இதற்கு பல வழிகளிலும் எண்ணெய் ஊற்றுகின்றன. காலம் காலமாக நாம் பேணிப் பாதுகாத்து வந்த அனைத்து நல்லொழுக்கங்களும் இப்போது ‘ஸ்கிரீன் சொட்ஸ்’ என்கின்ற வட்டத்துக்குள்ளும், ‘லைவ் வீடியோ’ என்ற வகைக்குள்ளும் சிக்கிச் சின்னா பின்னமாகி போகின்றது. அரசியல் சமூக வரையறைக்குள் இருக்கும் ஒவ்வொருவரும் சமூக வலைத்தளங்கள் மூலமே குறிவைக்கப்பட்டுத் தாக்கப் படுகின்றனர்.

சமூகத்தில் முன்னிலைக்குச் செல்லும் ஒவ்வொருவருக்கும் சமூக வலைத்தளங்கள் பாரிய நெருக்கடியானவை. காரணம், அவர்கள் அங்கே பாய் போட்டுப் படுத்துக் கிடந்து செய்யும் வேலைகள்தான்.

இன்றைய காலகட்டத்தில் அரசியல் பிரச்சாரம் உட்பட சமூக விழிப்புணர்வு அறிவிப்பு உள்ளடங்கலாக ஒரு நாட்டின் பிரதமர், ஜனாதிபதி ஆகியோர் கூட சமூக வலைத்தளங்கள் ஊடாகத்தான் மக்களுக்கு கருத்துகளைப் பகிர்கின்றனர்.

அப்படியான ஒரு நவீன காலத்தில் சமூக வலைத்தள தகவல்களைப் பொய் என்று ஒதுக்கிவிடவும் முடியாது, உண்மை என்று ஏற்றுக்கொண்டு விடவும் முடியாது.

இருந்த போதும் இந்த வகையான சேறு பூசல்கள் அல்லது இந்த வகையாக கீழ்த்தனமான நடவடிக்கைகளில் ஈடுபடுவோர், அதாவது பாலியல் ரீதியான தொந்தரவுகள் மற்றும் அபரிமிதமான சமூகச் சீர்கேடான வாக்குவாதங்களில் ஈடுபடுவோர் என்பவர்கள் கட்டாயம் கண்டிக்கப்பட வேண்டியவர்களாவே இருக்கின்றனர்.


குறிப்பிட்ட சில காலத்துக்குள் இந்த சமூக வலைத்தளச் சீர் கேடு என்பது எண்ணிப் பார்க்க முடியாத அளவுக்கு மலிந்து போய் கிடக்கிறது. இணையங்களில், பத்திரிகைகளில் வெளிவரும் ஒவ்வொரு நாள் செய்திகளிலும் இந்தச் சமூக வலைத்தளச் சீர்கேடு விடயங்கள் இடம்பிடிக்காமல் இல்லை.

இணையம் மூலம் பாலியல் தொல்லை, பேஸ்புக் மூலம் விபச்சாரம், பெண்களை வைத்து சமூக ஊடகங்கள் விபச்சாரம், போதை வஸ்து கடத்திய சமூக வலைத்தளக் கும்பல், பெண்களுடன் ஆபாசமாகப் பேசிய அரசியல் பிரமுகர், பெண்களோடு சமூக வலைத்தள மூடா காணொளி கேளிக்கை,



சமூகச் சீர்திருத்தவாதி ஒருவர் சமூக சீர்கேடு வீடியோ மூலம் அம்பலம், பாலியல் உறவு கொள்ளும் அரசியல்வாதியின் வீடியோ சிக்கியது, மெசஞ்சரில் பாலியல் சாட்டிங் - அரசியல் பிரபலம் சிக்கினார், வீடியோவின் மூலம் சிக்கிய முக்கிய புள்ளி, அரச அதிகாரியின் காம விளையாட்டு பேஸ்புக்கில் அம்பலம், வாட்ஸ் அப்பில் நிர்வாணப் படங்களைப் பகிர்ந்த முக்கிய புள்ளி சிக்கினார், இப்படி எண்ணற்ற வகையான சமூக வலைத்தளச் சீர்கேடுகள் நாளாந்தம் வந்து கொண்டே இருக்கிறது. இலங்கையைப் பொறுத்தவரை பலர் இந்த செயற்பாடுகளுக்கும் சிக்கிச் சின்னா பின்னமாகி குடும்பம் சந்தோசமான வாழ்க்கை என்பவற்றை இழந்து தவிக்கின்றனர்.

இந்த விடயங்களைத் தூண்டிவிட்டு முக்கிய புள்ளிகள் குறிவைக்கப்படுவதுதான் இங்கே இருக்கும் ஒரு மோசமான நடவடிக்கை. போலி முகநூல் கணக்குகள், போலி வாட்ஸ் அப் இலக்கங்களூடாக முக்கிய புள்ளிகள் குறிவைக்கப்பட்டு, அவர்களின் சமூக அந்தஸ்தைக் குறைக்க ஒரு கூட்டம் முண்டியடித்து ஓடித் திரிவதும் வருந்தத்தக்க விடயம். பெரும்பாலும்



பெண்களும், முக்கிய பிரபலங்களும் இவர்களின் பிடிக்குள் சிக்கி போகின்றனர்.

இலங்கையைப் பொறுத்தவரை இப்படியான விடயங்களில் பாதிக்கப் படுபவர்களை உள ரீதியாகக் கடுமையாகத் தாக்குகின்றமை கண்டறியப்பட்ட உண்மை. காரணம், இலங்கையில் மக்கள் ஒரு சமூக கட்டுப்பாட்டுக்குள் வாழ்ந்து பழகியமை, அதாவது வேற்று நபர் ஒருவருடன் பாலியல் ரீதியாக பேசுவது, அவர்களுடன் உறவை பேணுவது என்பது சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு விடயமாக இல்லாமையால் இதன்மூலம் பாதிக்கப் படுபவர்கள் அடுத்த கட்டத்துக்குள் நகர முடியாமல் போகின்றனர்.

சிலர் திட்டமிடப்பட்ட ரீதியில் பழி வாங்கப்படுவதும், சிலர் ஆர்வக்கோளாறில்




தவறிளைப்பதும், சிலர் நம்பிக்கை துரோகத்துக்கு ஆளாக்கப்படுவதும் கண்கூடு.

சமூக வலைத்தளங்களூடாக, அரசியல் அறிவிப்புகள், விழிப்புணர்வு நடவடிக்கைகள், சமய சமூக சடங்குகள் என்பன இடம்பெறும் காலகட்டத்தில் இந்த பாலியல் ரீதியிலான நடவடிக்கைகள் எப்படி வெளியே கசியவிடப்படுகின்றன? என்பது நம்பிக்கை துரோகமாகவே விழிக்கப் படுகிறது.

தமிழர்களைப் பொறுத்தவரையில் இப்போது இந்த சீர்கேடு தலைவிரித்தாடுகிறது - அவ்வப்போது சிக்கும் விடியோக்கள் மூலம் மன சஞ்சலம் அடையும் பலர் உளவியல் ஆலோசனைகளுக்குப் போய் காத்து இருக்கின்றனர். தற்போதைய காலகட்டத்தில் இந்த சம்பவங்களால் தற்கொலைகள் இடம்பெறாமை ஒரு நிம்மதியான விடயமாக உள்ளது.

நாடு முழுவதும் முடக்கப்பட்டுள்ளது. அரசியல், பொருளாதார, நெருக்கடி நிலை உள்ளது. குடும்பங்களைப் பிரிந்து பலர் அங்கலாய்க்கின்றனர். வெளிநாடுகளில் இருக்கும் பலர் இங்கிருப்போரைப் பாலியல் ரீதியாக குறிவைக்கின்றனர் என்ற குற்றச்சாட்டும் நிலவுகின்றது.

முக்கியமாக பிரபலமான நபர்கள் குறிவைக்கப்படுவதாகப் பேசப்படுகிறது. எதுவாக இருந்த போதும் ஒவ்வொருவரும் மிக அவதானமாக சமூக வலைத்தளங்களைக் கையாளப் பழகிக் கொள்ள வேண்டும். தொழில் வாய்ப்புகள், தொழில் விளம்பரங்கள் உட்பட பல நன்மைகளைச் செய்யும் சமூக ஊடகங்களைத் தவறான நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவோர் கண்டிப்பாக தண்டிக்கப்பட வேண்டியவர்களே!.

சமூக ஊடகங்களில் தெரியாத நபர்களுடன் நடக்கும் சம்பாஷணைகள் வெளியே வர காரணம், அந்த சம்பாஷணைக்குக் காரணமான முகமறியா நபர்களே!. எனவே, முகமறியா நபர்களுடன் உங்கள் சம்பாஷணையை வரையறைக்குள் வைத்துக்கொள்ளுங்கள். பாலியல் ரீதியிலானச் சுரண்டல்களுக்கு இடமளித்தல்


அகரம்
விளம்பரத் தொடர்புகளுக்கு
00 49 176 47 11 87 11


ஒருவகையில் அவர்கள் செய்யும் தவறும்தான். நம்பிக்கையான நபர்களுடன் பேசும் சம்பாஷணைகள் வெளியே கசியவிடப்படுவது திட்டமிட்ட துரோகம் தான். ஆனாலும், ஒவ்வொருவரும் தமது நன்மதிப்பில் அக்கறையுடன் சமூக வலைத்தளங்களில் நடமாட வேண்டிய கட்டாயத்தில் இப்போது உள்ளமை முக்கியமாகி உள்ளது.

தேவையற்ற முகமற்றவர்களின் சம்பாஷணைகளுக்கு உங்கள் உணர்வுகளைப் பலிக்கடா ஆக்கி, உங்கள் வாழ்க்கையை மன உளைச்சலுக்குள் சிக்க வைக்காதீர்கள். ‘உரலில் அகப்பட்டது உலக்கைக்கு தப்புமா?’ என்றொரு பழமொழி உண்டு. எனவே, நாம் சமூக வலைத்தளங்களைக் கையாளும்போது, அவதானமாக இருக்க கடமைப் பட்டுள்ளோம்.

திட்டமிட்ட சேறடிப்புகளையும், நம்பிக்கை துரோகங்களையும் வென்று வெளியேற வேண்டியது, ஒவ்வொருவரின் பிரயத்தங்களாகக் கூட இப்போது இருக்கின்றது. ‘பிக் பாஸ்’ வீட்டில் போட்டு காட்டப்படும் குறும்படங்கள் போல, சின்னச் சின்ன வாக்குவாதங்களுக்காக இப்போது இலங்கையில் ‘ஸ்கிரீன் சாட்’களும், வீடியோ காட்சிகளும் அம்பலப் படுத்தப்படுவது மனிதாபிமான மற்றும் சமூக அக்கறை அற்ற, வறட்டுக் கேவலமான மனநிலை மட்டுமே!.

உங்கள் உணர்வுகளை நீங்கள் மதிக்கும் போது வெளியே உங்கள் அந்தரங்கங்கள் பேசப்பட வாய்ப்பு இல்லை. கண்டிப்பாக எல்லோரும் துறவியும் இல்லை, எல்லோரும் விபச்சாரியும் இல்லை என்ற எண்ணத்தில் சமூக வலைத்தளங்களை ஊடுருவுங்கள்.

# ஏன் வேண்டும் தனித் தமிழ் ஈழம்?

அன்புச் செல்வன்

**சீனாவின் கடல்வழிப் பாதுகாப்பு நகர்வுகளும், இந்தியா அமெரிக்காவின் எதிர் வினைகளும்.**

**இடையில் சிக்கிய இலங்கையும், தமிழ் ஈழ மக்களின் தலைவிதியும்.**




இந்திய-அமெரிக்க-சீன நாடுகளின் கடல்சார் இராணுவ வழிச் சதுரங்க ஆட்டத்தில், தூண்டில் புழுக்களாகச் சிக்கிய சுமந்திரனும், சாணக்கியனும் அமெரிக்க கனேடிய நாடுகளில் தமிழீழ மக்களால் விரட்டி அடிக்கப்பட்ட காட்சிகளை இந்த இணைப்பில் பார்க்கலாம். ***<https://m.youtube.com/watch?time_continue=29&v=Py2BK1o9uY&feature=emb_logo>.***

தமிழீழ விடுதலைப் புலிகளையும், தமிழ் மக்களையும் உடன் இருந்தே எதிரிகளின் இனஅழிப்பை நடத்த உதவிய இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழரசுக் கட்சி, 2009இல் தமிழ் இனப் படுகொலைக்கு உதவிய துரோகிகள் என அகரம் சரியாகப் புரிந்து வெளியிட்ட பொழுது நம்ப மறுத்த தமிழ் அரசியல் சிந்தனையாளர்கள் இன்று இந்த அளவுக்கு அமெரிக்காவிலும், கனடாவிலும் விரட்டி அடிக்கப் படுகிறார்கள் என்பதால், ஈழத் தமிழ் இனம் விடிவைக் காண முடியாது.

சர்வதேச மற்றும் புவிசார் அரசியலில் தமிழீழ மண்ணும், அதன் புவிஇயல் அமைவிடமும் தவிர்க்க முடியாத கேந்திர மையங்களாக சீன, அமெரிக்க, இந்திய அரசுகளின் வல்லாதிக்கப் போட்டியின் அரங்கமாக இன்று மாற்றம் கண்டு விட்டது.

இன்று புலம்பெயர் தமிழ் மக்களின் அரசியல் செயற்பாடுகள் சர்வதேச அரங்கில், 2009இல் முள்ளி வாய்க்காலில் இடம் பெற்றது தமிழ் இனப் படு கொலை என்பதும், அந்தப் போர் சர்வ தேச விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டு, தமிழ் மக்களுக்கு நிதியும், இழப்பீடும், நிலையான அரசில் தீர்வும் காணப்பட வேண்டும் என்கிற முடிவுக்குப் பல நாடுகள் அணிதிரண்டு வருகின்றன என்கிற புரிதலை, சிங்கள ஆட்சியாளர்களிடம் ஏற்பட்டு விட்டது. அதனால் இலங்கை அரசும், இந்திய அரசும் திருடனுக்குத் தேள் கொட்டிவிட்டது போலப் பதைக்கிறார்கள், துடிக்கிறார்கள்.

சிங்களம் கூட்டுக் குற்றவாளி கொலைகார இந்தியாவிடம் ஓட, இந்தியா அமெரிக்காவிடம் ஓட, ஐ.நா.மனித உரிமைச் சபையிலிருந்து ஒதுங்கி இருந்த அமெரிக்கா, அடுத்த அமர்வில் ஐ.நா.மனித உரிமை ஆணைச் சபையில் ஸ்ரீலங்காவை போர்க் குற்ற விசாரணைகளில் சிக்கப்போகிற நிலையால் மீண்டும் அமெரிக்காவின் கால்களை இந்தியாவைப் பிடிக்க, இந்திய வெளி உறவு அமைச்சர் அமெரிக்க அதிபர்

ஜோ பைடனை நாட, கதை ‘பழைய குருடி கதவைத் திறவடி’ என்பதாக மாறியது.

இலங்கை அரசியலில் பேனாக இருந்த பசில் ராஜபக்ஷவை அமெரிக்கா அழைத்து, 600 கோடி டாலரும் கொடுத்துப் படிஅளக்கும் பெருமாளாக இலங்கையின் நிதி அமைச்சராகத் திருப்பி அனுப்பியது. இலங்கை அரசும் சுமந்திரன், சாணக்கியன் என்னும் இரண்டு இராம துதர்களைச் சென்று வருவீர் புலம் பெயர் தமிழர் கூட்டத்தை வென்று வருவீர் என அமெரிக்காவுக்கும், கனடாவுக்கும் மகிந்த ராஜபக்ஷக்கு நேரடியாக ஆசி வழங்கி, வழியனுப்பிய காட்சியை இந்தக் காணொளிப் பதிவில் காண முடிகிறது.

இந்த வானரப் படை பெற்ற வரவேற்பு அமோகமானது. சும்மா விட்டிருந்தால் இலண்டன், சுவிஸ், ஜெர்மனி, பிரான்ஸ், அவுஸ்திரேலியா எனப் பெரிய சூறாவளிச் சுற்றுப் பயணமே செய்து, உலகைக் கலக்கி இருப்பார்கள். ஆனால், வால்கள் ஒட்ட நறுக்கப்பட்ட நிலையில் முகநூல் கீச்சகத் தளங்களில் தங்கள் முகங்களைப் புதைக்கும் நிலையில் வீடுகள் திரும்ப வேண்டியதாயிற்று.

இந்தப் புதிய செய்திகளுக்குப் பின்னால் 2017இல் சீனா இந்து மகா சமுத்திரப் பரப்பில் இரண்டு முக்கிய இராணுவ நகர்வுகளைக் கடல் வழித் தடத்தில் மேற்கொண்டது.மேலே உள்ள கடல் வழித் தடத்தில் தென் இலங்கை, அம்பாந் தோட்டையில் 99 வருடக் குத்தகையில் ஒரு துறைமுகத்தை நிறுவியது. அதற்காக சீனா பெரும் கடன் உதவிகளை வலிந்து கொடுத்து, இலங்கையை மிரட்டிப் பணிய வைத்தது.

சீனா முதலில் **(Doraleh)** அதன் முதல் தொலை தூர இராணுவ கடற்படைத் தளத்தை நிறுவி விட்டிருந்தது. அதன் அடுத்த திட்டம் பாக்கிஸ்தான் **(Gwadar)** குவடாரில் உருவாக அதிக காலம் இல்லை என ஆய்வாளர்கள் அடித்துச் சொல்கிறார்கள்.

ஏற்கனவே இலங்கை வட பகுதியிலும், கச்ச தீவிலும், மன்னார் வளைகுடாப் பகுதிகளிலும் சீனா பலமாகக் காலூன்றி விட்ட நிலையில், பாக்கிஸ்தானிலும் சீனா கடல் படைத் தளம் அமைத்து விட்டால் இந்தியாவுக்குத் தூக்கம் எப்படி வரும்?

இந்தக் கட்டுரையின் தொடக்கக் காட்சிகள் உங்களுக்குப் போதிய விளக்கத்தை தரும். ஈழத் தமிழர் நாம் எமது கொள்கைகளில் உறுதியாக உரத்துச் சென்னால், எம்மை அழிக்க உதவிய உலக அரசுகளே எமக்கான தனித் தமிழ் ஈழத்தை அங்கீகரித்து, ஆதரவளித்து அமைக்கவும் முன்வரும் காலம் அருகில் வந்து விட்டது. இதைத் தெரிந்து கொண்ட சிங்களமும், இந்தியாவும் சுமந்திரன், சாணக்கியன், டக்லஸ் போன்ற புல்லுருவிகளுக்குப் புத்துயிர் கொடுத்த படியே இருப்பார்கள்.

நாம்தான் கனடாவில் செய்தது போல அவர்களை உலக அரங்கிலிருந்தே அடித்து விரட்ட வேண்டும். நம் இனம், எம் தாய் மண் உயிர் தப்ப வேண்டும் என்றால், அவர்களை விரட்டியே ஆக வேண்டும்.

**[தேடல் தொடரும்.]**




பூமிபுத்திரன்

# கவலைக்குரிய திரியும் நகர்வும்



கொரோனப் பெருந் தொற்றுத் தொல்லையில் இருந்து மனித குலம் வெகு விரைவில் விடுபட்டு விடும் என்ற நம்பிக்கை நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வருகின்றது. நான்காவது அலைத் தாக்குதல், திரிபடைந்த தீநுண்மியின் தீவிர பரவல், தடுப்பூசி பெற்றுக் கொண்டவர்களும் மரணமடைவது போன்ற செய்திகளால் நிம்மதியைத் தொலைத்தவர்களாக வாழவேண்டிய நிலையில் மக்கள் உள்ளனர். இந்தப் பிரச்சனைக்கு எந்த வழியிலாவது தீர்வொன்றைக் கண்டுவிட்டு பொருண்மிய அபிவிருத்தியில் கவனம் செலுத்தத் துடிக்கும் அரசாங்கங்களும், பன்னாட்டுத் தொழில் நிறுவனங்களும் செய்வதறியாது உள்ளன.

இத்தகையச் சூழ்நிலையில் மிக வேகமாகப் பரவும் டெல்டா வகைக் கொரோனத் தீநுண்மியை விடவும், அதி வேகமாகப் பரவக் கூடியதும், அதிக திரிபுகளைக் கொண்டதுவும், மனிதக் கலங்களை நேரடியாகவே தாக்கக் கூடியதுமான ஒரு வகைத் தீநுண்மி கண்டறியப்பட்டுள்ளது என்கின்ற சேதி கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. தற்போது வரை கண்டுபிடிக்கப்பட்டுள்ள தடுப்பூசிகளுக்கும் கூட, இது கட்டுப்படாத திறனைக் கொண்டுள்ளது என்கின்ற தகவல் பீதியைத் தோற்றுவித்துள்ளது.

உலக சுகாதார நிறுவனத்தினால் ‘கவலைக்குரிய திரிபு’ என வகைப்படுத்தப் பட்டுள்ள, ‘ஒமைக்ரோன்’ எனப் பெயரிடப் பட்டுள்ள ***B.1.1.529*** ரக கொரோனாத் தீநுண்மி தற்போது மற்றொரு பயணத் தடைக்கும், பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கும் வித்திட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

நவம்பர் மாத ஆரம்பத்தில் தெற்கு ஆப்பிரிக்க நாடான பொற்ஸ்வானாவில் முதன் முதலில் கண்டறியப்பட்ட ‘ஒமைக்ரோன்’ வகை தீநுண்மி விரைவிலேயே தென்னாபிரிக்க நாட்டில் வேகமாகப் பரவியது. இதனைத் தொடர்ந்து இந்தவகைக் கிருமி விரைவிலேயே வேறு நாடுகளுக்கும் பரவக் கூடும் என்ற அச்சம் வெளியிடப்பட்டிருந்த நிலையில், நவம்பர் இறுதி வாரத்தில் ஹொங்கொங், இஸ்ரேல், பெல்ஜியம், யேர்மனி, நெதர்லாந்து, டென்மார்க், செக் குடியரசு, இத்தாலி, ஐக்கிய இராச்சியம் ஆகிய நாடுகளில் திரிபடைந்த தீநுண்மி கண்டுபிடிக்கப்பட்ட செய்தி வெளியாகியது.



ஐரோப்பாவில் முதல் நாடாக பெல்ஜியத்தில் நவம்பர் 26ஆம் திகதி இந்தவகைத் தீநுண்மியின் தொற்றுக்கு ஆளான முதல் நோயாளி கண்டறியப் பட்டார். தொடர்ந்து ஏனைய நாடுகளிலும் குறித்தவகைத் தீநுண்மித் தொற்றுக்கு ஆளானோர் கண்டறியப்பட்டனர். நெதர்லாந்தில் அதிக எண்ணிக்கையானோர் கண்டறியப் பட்டுள்ளனர். நவம்பர் 26ஆம் திகதி தெற்கு ஆப்பிரிக்க நாடுகளில் இருந்து வருகை தந்த 624 பயணிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதில் இவர்களுள் 61 பேர் திரிபடைந்த தீநுண்மியின் தொற்றுக்கு ஆளாகியுள்ளமை கண்டறியப்பட்டது. இந்நிலையில், தெற்கு ஆப்பிரிக்க நாடுகளில் இருந்து வருகை தந்த அனைவரும் கொரோனாப் பரிசோதனை செய்து கொள்வதுடன், பரிசோதனை முடிவுகள் வரும்வரை சுய தனிமைப் படுத்தலில் இருக்குமாறும் அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.

டென்மார்க் நாட்டிலும் தென்னாபிரிக்காவில் இருந்து வருகைதந்த இருவர் ‘ஒமைக்ரோன்’ தொற்றுக்கு ஆளாகியுள்ளமை உறுதி செய்யப் பட்டுள்ளது. ஏனைய நாடுகளில் பரிசோதனை முடிவுகள் இந்தக் கட்டுரையை எழுதிக் கொண்டிருக்கும் நேரம் வரை வெளியாகவில்லை. எந்த நேரத்திலும் அவை வெளிவரலாம் என்ற எதிர்பார்ப்பு உள்ளது.

இதனைத் தொடர்ந்து தெற்கு ஆப்பிரிக்க நாடுகளான தென்னாபிரிக்கா, பொற்ஸ்வானா, மாலவி, லெசத்தோ, எஸ்வாற்றினி, நமிபியா, மொசாம்பிக் மற்றும் சிம்பாப்வே ஆகிய நாடுகளில் இருந்து வருகை தரும் விமானங்களுக்கு ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் தடை விதிக்கப் பட்டிருக்கின்றது. இதேபோன்ற பயணத் தடையை ஐக்கிய அமெரிக்காவும், பிரித்தானியாவும் கூட அறிவித்துள்ளன. இஸ்ரேல் ஒருபடி மேலே சென்று, எந்தவொரு வெளிநாட்டில் இருந்தும் விமானங்கள் வருவதைத் தடை செய்துள்ளது.

தென்னாபிரிக்காவில் இருந்து வருகைதரும் விமானங்களுக்குத் தடை விதிக்கப் பட்டுள்ளதை அந்த நாடு வெகுவாகக் கண்டித்துள்ளது. இது தொடர்பாக செய்திக் குறிப்பு ஒன்றை






வெளியிட்ட அரசுத் தலைவர் சிறில் ரம்போசா, 'பயணத் தடை நடவடிக்கை ஒரு தலைப்பட்சமானது, ஏற்றுக் கொள்ளப்பட முடியாதது" என்கிறார்.

மறுபுறம், உலக சுகாதார நிறுவனமும் பயணத் தடை நடவடிக்கைகளுக்கு எதிரான கருத்துகளைப் பதிவு செய்துள்ளது. 'அவசரகதியில் எடுக்கப்படும் நடவடிக்கைகளால் பீதியும், குழப்பமுமே மிஞ்சும்" என்பது அந்த நிறுவனத்தின் கருத்தாக உள்ளது.

கொரோனாப் பெருந் தொற்றுக்கு எதிரான போராட்டத்திற்கு முழு உலகுமே இணைந்து போராடுவது போன்ற தோற்றப்பாடு இருந்தாலும், மறைமுகமான அரசியல் நகர்வுகளே அதிகம் உள்ளன. மனித குலத்துக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ள இந்தத் தீநுண்மியின் அபாயத்தை ஓரணியில் நின்று எதிர்த்திருக்க வேண்டிய உலக சமூகம், குறுகிய அரசியல் நோக்கங்களுடனும், பூகோள நலன்களுடனும் செயற்பட்டு வருகின்றமை வேதனை தருவதாக உள்ளது.

கொரோனாத் தீநுண்மி தொடர்பான செய்திகள் 2020ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் பரவலாக வெளியான போதில், அது சீனாவுக்கு மாத்திரம் உரிய பிரத்தியேகப் பிரச்சனையாகப் பார்க்கப்பட்டது. அதன் விளைவை உலக நாடுகள் வெகு விரைவிலேயே அனுபவிக்க நேரிட்டது. கொரோனாத் தீநுண்மிக்கு எதிராக முதன்முதலில் கண்டுபிடிக்கப்பட்ட ரஸ்யத் தயாரிப்புத் தடுப்பூசியான 'ஸ்புட்னிக்-வி' ஒரு வருடத்தைக் கடந்த பின்னரும் கூட, மேற்குலகின் அங்கீகாரத்துக்குக் காத்திருக்கின்றது. தற்போது பாவனையில் உள்ள தடுப்பூசிகள் கூட, உலக நாடுகளுக்கிடையில் சமமாக விநியோகம் செய்யப்படாத நிலையே தொடர்கிறது. ஒருசில நாடுகளில் மூன்றாவது தடுப்பூசியைக் கூட மக்கள் பெற்றுவிட்ட நிலையில், ஒரு தடுப்பூசி கூடக் கிடைக்காத நாடுகளும் உள்ள அவலம் நீடிக்கின்றது.

கொரோனா ஒரு உலகளாவிய பெருந் தொற்று என்பதை மறந்ததாக ஒருசில அரசாங்கங்கள் நடந்து கொண்டிருக்கும் நிலை நீடிப்பது, எரிகின்ற வீட்டின் நடுவே ஒரு அறையினுள் இருந்துகொண்டு உயிர்தப்ப நினைப்பதற்கு ஒப்பானது. தற்போது மேற்குலகிற்கான விமானப் பயணங்களுக்கான தடை என்பதுவும் சிறுபிள்ளைத்தனமான ஒன்றாகவே தெரிகின்றது. இத்தகைய நடவடிக்கைகளை விடுத்து, உடனடியாகவே தடுப்பூசி விநியோகத்தைத் துரிதப்படுத்தி, உலகின் ஒவ்வொரு மூலையிலும் வாழும் அனைவருக்கும் தடுப்பூசி கிடைப்பதை உறுதி செய்வதே சரியானது. ஆனால், மேற்குலக மக்களின் உயிர்கள் ஏனைய நாடுகளில் வாழும் மக்களின் உயிர்களை விடவும் பெறுமதியானது என்ற சிந்தனை உள்ளவரை இதற்கான சாத்தியம் குறைவு என்பதே துயரமான யதார்த்த நிலை.





வாடிக்கையாளர்களின் பேராதரவுடன் 20ஆம் ஆண்டில்....
மாபெரும் ராஜ முத்திரை
வாடிக்கையாளர் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் நத்தார், புதுவருடம், தைப் பொங்கல் நல்வாழ்த்துகள்
SK SINCE 2003
S.K. Silks & Gold Paradise
ADLER STR. 33, 44137 DORTMUND
Tel : 0231 9501647
Fax : 0231 9501648

சண் தவராஜா

# எதிர்ப்புகளால் வளர்ச்சி காணும் சுமந்திரன்





**சர்ச்சைகளுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுக்கும் இடையில் மிக நெருங்கிய தொடர்பு இருக்கிறது. அவர் நின்றால் சர்ச்சை, நடந்தால் சர்ச்சை, பேசினால் சர்ச்சை, பேசாவிட்டால் சர்ச்சை என சர்ச்சைகள் எப்போதும் அவரைப் பின்தொடர்ந்தவாறே உள்ளன.**

அதனால்தானோ என்னவோ, அவர் எப்போதும் ஊடக வெளிச்சத்தில் வலம்வரக் கூடியதாக உள்ளது. அவரை அரசியலில் இருந்தும், பொதுவாழ்வில் இருந்தும், முடிந்தால் உலகத்தில் இருந்தே ஒழித்துக் கட்டிவிட நினைக்கும் ஒரு சாராருக்கு, அவர் மீதான ஆத்திரம் இன்னமும் அதிகரிக்கிறது. 'ஆத்திரக்காரனுக்கு புத்தி மத்திமம்' என்ற சொலவடைக்கு ஒப்ப, நிதானமிழந்த நிலையில் அவர்கள் மேற்கொள்ளும் ஒவ்வொரு நடவடிக்கைகளும் சுமந்திரனை முன்னிலும் விட அதிகமாக புகழ் வெளிச்சத்துக்குக் கொண்டு வந்து சேர்த்து விடுகின்றது.



நான் மேலே விவரித்த விடயத்தை நினைவூட்டும் ஓர் சம்பவம் அண்மையில் கனடா நாட்டில் நடைபெற்று முடிந்திருக்கின்றது. அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அழைப்பையேற்று, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் நியூயோர்க் சென்ற சட்டவாளர் குழுவிற்குத் தலைமையேற்றுச் சென்ற சுமந்திரன், சமாந்தரமாக தனது நாடாளுமன்றச் சகாவான இரா சாணக்கியனுடன் இணைந்து கனடா மற்றும் பிரித்தானியா ஆகிய நாடுகளுக்கும் சென்றிருந்தார்.

உயர்மட்டச் சந்திப்புகளுக்கு அப்பால், புலம்பெயர் தமிழ் மக்களைச் சந்தித்துக் கருத்துப் பரிமாறல் மேற்கொள்வதும் அவரின் நிகழ்ச்சி நிரலில் அடங்கியிருந்தது. அத்தகைய ஓர்

சந்திப்பைக் கனடா நாட்டில் மேற்கொண்டிருந்த வேளையில், சுமந்திரனுக்கு எதிர்ப்புத் தெரிவித்த குழுவொன்றின் செயற்பாடு காரணமாக கூட்டம் தடைப்பட்டது. இது தொடர்பான செய்திகளும், காணொளிகளும் மரபுசார் ஊடகங்களிலும், சமூக ஊடகங்களிலும் அளவுக்கு அதிகமாகப் பகிரப்பட்டதைப் பார்க்க முடிந்தது.

சுமந்திரன் கலந்து கொண்ட கருத்தாடல் நிகழ்வு இடைநடுவில் தடைப்பட்டமை அல்லது தடைப்படுத்தப் பட்டமை ஒரு வெற்றிகரமான செயல் என ஒரு சாரரால் கொண்டாடப் பட்டதையும், தொடர்ந்து கொண்டாடப் படுவதையும் பார்க்க முடிகின்றது. அவ்வாறு கொண்டாடுவது அவரவர் ஜனநாயக உரிமை. அது விடயத்தில் சரி, பிழை சொல்வது பொருத்தமற்றது. ஆனால், புலம்பெயர் தமிழ் மக்களின் ஒட்டுமொத்தக் கருத்தாக, எண்ணமாக அதனை உருவகம் செய்வதை ஏற்றுக் கொள்ள முடியாது. அதனை மறுதலிப்பதற்கான உரிமை புலம்பெயர்ந்து வாழும் ஒவ்வொரு ஈழத் தமிழனுக்கும் உள்ளது.

புலம்பெயர் ஈழத் தமிழர்களின் எண்ணிக்கை ஒரு மில்லியனுக்கும் அதிகமானது என்பது மதிப்பீடு. புலம்பெயர் தமிழ் மக்களில் அதிக எண்ணிக்கையானோர் கனடாவிலேயே வாழ்கிறார்கள் என்பது உண்மை. அந்த நாட்டில் வாழும் ஈழத் தமிழர்களின் எண்ணிக்கை மூன்று இலட்சத்துக்கும் அதிகமானது. வேறு வகையில் சொல்வதானால் புலம்பெயர் ஈழத் தமிழ் மக்களில் மூன்றில் ஒரு பங்கினர் அல்லது அதைவிடச் சற்றுக் குறைவான எண்ணிக்கையானோர் கனடாவில் வசித்து வருகின்றனர்.

ரொறொன்ரோவில் நடைபெற்ற சம்பவத்தில் கலந்து கொண்டு குழப்பம் விளைவித்தோரின் எண்ணிக்கை ஐம்பதிற்கும் குறைவானதே!. அதனை விடவும் அதிகமானோர் சுமந்திரன் பேச இருக்கிறார் எனத் தெரிந்து கொண்டு கூட்டத்திற்கு வருகை தந்திருந்தனர் என்பதையும் பார்க்க முடிந்தது. மூன்று இலட்சம் பேரில் ஐம்பது பேர் என்பது எத்தனை வீதம் என்பதையும், ஒட்டு மொத்த புலம்பெயர் தமிழ் மக்களான பத்து இலட்சம் பேரில் அவர்கள் எத்தனை பேர் என்பதையும் கணக்கிட்டுப் பார்த்து இலகுவில் தெரிந்துகொள்ள முடியும். அத்தகைய கணக்கீட்டின் முடிவில் குழப்பம் விளைவித்த ஒருசிலர் கணக்கில் கொள்ளப்பட முடியாதவர்கள் என்பதைப் புரிந்துகொள்ள முடியும்.

ஆனாலும் இந்த விடயத்தை முற்றாகப் புறந்தள்ளிவிட முடியாது. அன்றைய கூட்டத்தில் குழப்பம் விளைவித்தவர்களின் எண்ணிக்கை சொற்பமே ஆயினும், அவர்களால் நடைபெற்ற சம்பவத்தை ஒரு மாபெரும் செய்தியாக ஊடகங்களிலும், சமூக ஊடகங்களிலும் பரப்ப முடிந்திருக்கின்றது. அத்தகைய வல்லமையை அவர்கள் அல்லது அவர்களைப் பின்னாலிருந்து இயக்கியவர்கள் கொண்டிருக்கின்றார்கள்




என்பது தெளிவாகின்றது. அது மாத்திரமன்றி, புலம்பெயர் தமிழர்கள் மத்தியில் சுமந்திரனின் செயற்பாடுகளில் அதிருப்தி கொண்டோரும் கணிசமாக உள்ளார்கள் என்பதையும் மறுத்து விடுவதற்கில்லை.

அத்தகையோரின் வெறுப்பைச் சம்பாதித்துக் கொள்வதில் சுமந்திரன் எப்போதுமே பின்னிற்பதில்லை என்பது வெளிப்படையான விடயம். ஒரு சட்டகத்திற்குள் நின்று கொண்டு மனச்சாட்சிக்கும், பகுத்தறிவுக்கும் எதிராகப் பேசும் குணம் அவரிடம் எப்போதும் இருந்ததில்லை. 'யதார்த்தவாதி வெகுஜன விரோதி' என்ற சொலவடை சுமந்திரனுக்கு வெகுவாகவே பொருந்தும்.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அழைப்பையேற்று, சிறிலங்காவில் உள்ள தமிழ்க் கட்சிகளில் மிகப் பெரிய கட்சியாக விளங்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உத்தியோகப் பூர்வ பிரதிநிதியாகச் செல்லக் கூடிய தகுதி படைத்த சுமந்திரனுக்கு, தான் பிரதிநிதித்துவப் படுத்துவதாக அமெரிக்க அரசாங்கம் கருதும் தமிழ் மக்களுடன் கருத்தாடலை மேற்கொள்ளும் தகுதி இல்லையென ஒரு சாரார் வாதிடுவது எத்தகைய தார்மீகம் என்பதைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

அத்தகையோரின் கருத்தின் பிரகாரம் தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு பிரதிநிதிக்குத் தமிழ் மக்களின் சார்பில் பேசும் உரிமை இல்லையென்றால், வேறு யாருக்கு அந்த உரிமை இருக்கிறது? நடைபெற்ற கூட்டத்தில் பேசும் உரிமையைச் சுமந்திரனுக்கு மறுத்த நபர்கள், அவர் கனடாவுக்கே வரக் கூடாது என சொல்வதன் நியாயம் என்ன? அவ்வாறு சொல்லும் உரிமை அவர்களுக்கு உள்ளதா? எனப் பல கேள்விகள் எழுகின்றன. இதற்கான பதில்களை யாராவது வழங்குவார்களாக இருந்தால் மகிழ்ச்சியே!.

சுமந்திரனின் கருத்துரிமையை மறுப்பதன் ஊடாக அவர் பிரதிநிதித்துவம் செய்யும் அவருக்கு வாக்களித்த யாழ்ப்பாண மாவட்ட மக்களின் கருத்துரிமை மீறப்படுவதை ரொறொன்ரோ கூட்டத்தில் குழப்பம் விளைவித்தோர் அறிவார்களா? சிறிலங்காவில் தமிழ்த் தரப்பின் குரலாக ஆணித்தரமாக, தர்க்க நியாயங்களை மேற்கோள் காட்டி முழங்குவதன் ஊடாக சிங்களப் பேரினவாதிகளின் வெறுப்புக்கு ஆளாகியுள்ள சுமந்திரனின் கூட்டம் குழப்பப்பட்டதை சிங்களப் பேரினவாதிகள் கொண்டாடி உள்ளதை அவர்கள் அறிவார்களா?

முன்னொருமுறை ஜெனீவாவில் மனித உரிமைச் சபையில் சிறிலங்காவுக்கு எதிரான ஒரு பிரேரணையை அமெரிக்கா தலைமையிலான மேற்குலகு முன்வைத்த போது, நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார், பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, ஊடகர் சந்திப்பு ஒன்றை ஜெனீவா பத்திரிகைப் பேரவையில் நடத்தியிருந்தது. இது தொடர்பில் கேள்விப்பட்ட பிரித்தானியப் பிரதிநிதி, 'தமிழ் மக்களின் நலன்கருதி நாங்கள் மேற்கொள்ளும் திட்டத்தை ஒரு சாரார் எதிர்த்தால், நாங்கள் எவ்வாறு நடந்து கொள்வது?" என மிகுந்த மனவேதனையுடன் கருத்துப் பரிமாறியிருந்ததை அவர்கள் அறிவார்களா? இதே போன்றதொரு கேள்வியைத் தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ஊடாடிக் கொண்டிருக்கும் அமெரிக்கத் தரப்பு முன்வைத்தால் அதற்கு எத்தகைய பதிலைக் கூற முடியும்?

அண்மையில் கொழும்பில் இருந்து ஊடக நண்பர் ஒருவர் பேசியிருந்தார். பல்வேறு விடயங்களுள் அவர் பகிர்ந்து கொண்ட ஒரு விடயம் மிகவும் முக்கியமானது.

"இன்னும் ஓரிரு பத்து வருடங்களில் ஈழக் கோரிக்கையைத் தமிழர்கள் முற்றாக மறந்து விடுவார்கள்' எனச் சிங்களப் பேரினவாதிகள் உறுதியாக நம்புகிறார்கள்;. 'புலம் பெயர் தமிழர்கள் மத்தியில் இருந்தே இன்னமும் சன்னமாக ஒலித்துக் கொண்டிருக்கும் இந்தக் குரல், அடுத்த தலைமுறையிடம் இருக்காது. எனவே, இன்னும் 10, 20 வருடங்களில் ஈழம்

குறித்துப் பேச யாரும் இருக்க மாட்டார்கள் என அவர்கள் நினைக்கிறார்கள்" என்றார்.

இந்தச் செய்தி உண்மையானால், சுமந்திரன் கலந்து கொண்ட கூட்டத்தைக் குழப்பியவர்கள் முதலில் செய்ய வேண்டியது, புலம் பெயர் இளைய தலைமுறையை அரசியல் மயப்படுத்துவதே!. அதனைச் செய்யாமல் விட்டுவிட்டு இதுபோன்ற குழப்பங்களை உருவாக்குவது தமது சுய இன்பத்தைத் தீர்த்துக் கொள்ளவே உதவும்.

இந்த நேரத்தில் சுமந்திரனின் அரசியல் செயற்பாடுகள் தொடர்பில் பேசாமல் கடந்து சென்றுவிட முடியாது. வெற்றிகரமான ஒரு சட்டத்தரணியாக விளங்கிய சுமந்திரன், ஒரு சட்ட ஆலோசகராகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினுள் வருகை தந்தார். பின்னர் ஒரு சந்தர்ப்பத்தில் தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்றில் பிரவேசிக்கும் வாய்ப்பைப் பெற்றுக் கொண்டார்.

அவரையும், அவரது அரசியற் பிரவேசித்தையும் தனிப்பட்ட முறையிலும், அரசியல் அடிப்படையிலும் பிடிக்காத ஒருசிலர், அவரை மட்டந்தட்டும் நோக்கில் 'பின் கதவால் நாடாளுமன்றம் வந்தவர்' எனக் கிண்டல் செய்த போது, நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு, தனது மக்கள் செல்வாக்கை அவர் நிரூபித்துக் கொண்டார். தேர்தல் முடிவுகள் வெளியான சமயத்தில், அவரது வெற்றி தொடர்பில் பல்வேறு விமர்சனங்களை முன்வைத்து, அவரைக் கொச்சைப்படுத்த மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளைத் தனது புறங்கையால் தள்ளிவிட்டு, இன்றும் ஒரு அசைக்க முடியாத நபராக தன்னைத் தக்கவைத்துக் கொண்டுள்ளார்.

பொது விடயங்கள் தொடர்பில் அவர் மனச்சாட்சியுடன் பகிர்ந்து கொண்ட கருத்துகளைச் சர்ச்சைகளாக்கி, தமது மன வக்கிரங்களைத் தீர்த்துக் கொள்ள பலர் முயன்ற வேளைகளில், அவற்றைச் சட்டை செய்யாமல் தனக்குச் சரியெனப்பட்ட விடயங்களில் அவர் முன்னோக்கி நடைபோட்டார். தற்போது 'தமிழரசுக் கட்சிக்கும், இரா. சம்பந்தனின் பின்னான காலகட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் தலைவராக மாற சுமந்திரன் முயல்கிறார்" என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது. அந்த இரண்டு பதவிகளும் தனக்குப் பொருத்தமானவை எனச் சுமந்திரன் கருதுவாரேயானால், அந்தப் பதவிகளை அவர் அடைவதை யாராலும் தடுத்துவிட முடியாது என்பதே எனது கணிப்பு. அதற்கான தகுதியும், திறமையும், அதனை நோக்கிக் காய்நகர்த்தும் வல்லமையும் அவரிடம் தேவைக்கும் அதிகமாகவே உள்ளது என்பதை மறுத்துவிட முடியாது.

'உனது நண்பர்களைப் பற்றிச் சொல், நீ யாரெனச் சொல்கிறேன்" என்பது மிகவும் பிரபலமான ஒரு கூற்று. சுமந்திரனைப் பொறுத்தவரை இதனை மறுதலையாகச் சொல்வதே பெரிதும் பொருத்தமாக இருக்கலாம். 'உன் எதிரிகள் யாரெனச் சொல், நீ யாரெனச் சொல்கிறேன்." ஏனெனில் சுமந்திரனின் படிப்படியான முன்னேற்றம் ஒவ்வொன்றிலும் அவரது எதிரிகளே தோன்றாத துணையாய் இருந்திருக்கிறார்கள்.



ஆனந்தன், இலங்கை

# தமிழ் மக்களின் புரட்சி மலர்ந்தது, மாவீரர் தியாகம் வென்றது!



'சுடாத சிங்களப் படையும் அல்ல, சுடப்படாத தமிழ் மக்களும் அல்ல'

2009க்குப் பின்னர் ஈழத் தமிழ் மக்கள் தமது அரசியல் போராட்டத்தைக் கைவிட்டு விட்டார்கள் என்பதை உலகுக்கு உணர்த்த, சிங்களப் பேரினவாத அரசின் அடக்கு முறை வெற்றி பெற்று விட்டதாக மார்தட்டி நின்ற வேளையில், 2021 மாவீரர் நாளும், தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களது பிறந்த நாளும், புதுவிதமானப் புத்தெழுச்சியுடன் ஈழத் தமிழ் மக்களால் நினைவு கூரப் பட்ட செய்திகள், தமிழ் மக்கள் மனங்களைப் பேரெழுச்சி கொள்ள வைத்துள்ளன.

### சிங்களத்தை நோண்டி நொங்கெடுத்த விக்கினேஸ்வரன்.

பாராளுமன்ற உறுப்பினராக சபையில் அடி எடுத்து வைத்த நாள் முதல், அவர் ஈழத் தமிழரது தாய் மண், தாய் மொழி பற்றிய வரலாற்று உண்மைகளை மிக அழுத்தமாகப் பேசியும், சிங்களத் தலைவர்களும், அரசுகளும் வரலாற்று ஆதாரங்களைத் திரித்தும், மறைத்தும், மறுத்தும் பேசி ஏமாற்று அரசியலைச் செய்வதாகக் குற்றம் சாட்டியும் வந்துள்ளார். அதனால் அவர்மீது தீராத வன்மத்தை சபாநாயகர் தொடக்கம், தமிழ்த் துரோக அரசியல் பேசும் டக்லஸ் கருணாவரை அனைவரையும் வாட்டி வரும் நிலையை அவர் நன்றாகத் தெரிந்து செய்து வருகிறார்.

அவரது இரண்டு மகன்களும் சிங்கள அரசியல் வாதியான ரவி கருணாநாயக்கா குடும்பத்தில் மணம் முடித்த காரணத்தால், அவரைச் சிங்களத்தால் பாம்பு என அடிக்கவோ, பழுது (கயறு) எனக் கையில் எடுக்கவோ முடியாதவராக சட்டம் தெரிந்த பழுத்த அறிவாளியாக உள்ள காரணத்தால், சிங்களத்தால் எதுவும் செய்ய முடியாத நிலை. இதை நன்கு பயன்படுத்தத் தெரிந்த அவர், பேச்சைத் தொடங்கும் பொழுதே தலைவரின் பிறந்தநாள் வாழ்த்தாக இப்படிப் பேசினார்.

"இந்தியாவிற்கு ஆற்றிய அவரின் சேவையின் நிமித்தம் நேதாஜி என்றென்றும் சிரஞ்சீவியாக மக்கள் மனதில் வாழ்வார்!" அஹிம்சையின் பால் ஈர்க்கப் பட்டவன் என்ற முறையில் மேற்கண்ட காந்திஜியின் வாசகங்களை இலங்கையில் வடக்கு கிழக்கை மையமாக வைத்து அங்கு உதித்த வீரத் தமிழனின் இன்றைய பிறந்த நாள் அன்று அவர் ஞாபகார்த்தமாக சமர்ப்பிக்கின்றேன்" எனத் தெரிவித்துள்ளார்.

அவர் பிரபாகரனின் பேரைச் சொல்லாமல், பிறந்த நாளைச் சொல்லி, முழு உலகத்துக்கும் தெரிய வைத்து விட்டார். எந்தப் பிரபாகரன் பெயரைச் சொல்ல உலக நாடுகள் தடை போட்டுள்ளனவோ, அதே பிரபாகரன் பெயரையும், பிறந்த நாளையும் நினைவையும் கொன்றழித்த சிங்கள தேசத்தின் நாடாளுமன்றத்தில் பேசி, அதன் பதிவேட்டிலும் பதிவு செய்ய வைத்து விட்டார். அதே நேரத்தில் சட்டப்படி அந்தப் பேச்சை யாரும் பதிவிலிருந்து அகற்ற முடியாத படிக்கு ஆப்பும் அடித்து விட்டார்.



இது போலப் பல தடவைகள் அவர் செய்த குறும்புகளை, விசமத் தனங்களை அவை எந்த அளவுக்கு கோட்டபாயாவையும் ஏனைய சிங்கள இனவெறித் தலைவர்களையும் உலக அரங்கில் சிக்க வைக்கப் போகின்றன என்பதை, பேராசிரியர் குமார் டேவிட் ஒக்.11, 2020ல் எழுதி உள்ளார். (அதனைச் சிறப்புக் கட்டுரையாக விரைவில் அகரம் தரும்.)

தலைவரின் பிறந்த நாளை யாழ் பல்கலைக் கழகம் கேக் வெட்டிக் கொண்டாடியது. அது உள்அரங்கில் நடந்தது. ஆனால் வெளியே தமிழீழ மண் எங்கும் இராணுவ அடக்கு முறைகளையும், நீதி மன்றங்களின் தடைகளையும் மீறிய மக்கள் சுட்டாலும் ஓடமாட்டோம், செத்தாலும் மாவீரரை மறக்க மாட்டோம் என்பது போல இராணுவம் வந்து தடுக்க முன்னரே நினைவேந்தலை பல இடங்களில் நினைத்தபடி நடத்தி முடித்து விட்டனர்.

இங்கே தரப்பட்டுள்ள நேரடி மோதல் காட்சிகள் 2009ன் பின்னர் இராணுவத்தால் அழிக்கப்பட்ட வட மராட்சி சாட்டி மாவீரர் துயிலும் இல்லத்தில், தமிழ் தேசிய மக்கள் முன்னணிப் பிரமுகர் சட்டத்தரணி சுகாஸ் தலைமையில் பொதுமக்கள் மாவீரர் நினைவேந்தல் நிகழ்ச்சியை இராணுவம் துப்பாக்கிகள் கொண்டு தடுத்து மிரட்டிய காட்சிகள். (படங்களும் செய்தியும் உபயம் தமிழ் வின்)

அதே சமயத்தில் சிங்களத் தலைவர்களை மீள முடியாத கோபத்தில், வாயில் வந்த படி திட்டவும், அச்சுறுத்தவும் வைத்துள்ளதை பாரளுமன்ற உரையாடல்களே போதுமான ஆதாரமாக உள்ளன. இதற்குத் தொடக்கப் புள்ளி போட்டவர் யாழ்பாண பா.உ. முன்னாள் உயர்நீதிமன்ற நீதிஅரசர் க.வி.விக்கினேஸ்வரன் ஐயா அவர்களே!.

வாய்ப்பு கிடைக்கும் பொழுதெல்லாம் சிங்களத்தின் மேட்டிமைத் தனத்தை அவர்களின் குழப்பமான சிந்தனைகளையும், செயல்களையும் தமது அறவாலும், சொல் வன்மையாலும் நோண்டி நொங்கெடுத்து நோகடிக்கத் தவறுவதில்லை.

உதாரணமாக கடந்த மே 19இல் பாராளுமன்றத்தில் அவர் இவ்வாறு பேசினார்:-

“இன்று நாம் நினைவு கூருவது 2009இல் வந்த ஒரு துன்பமான நாள். ஸ்ரீரீலங்காவின் வடக்கு, கிழக்கு தமிழர்களைப் பொறுத்த வரையில் இன்றும் கூடப் பல தடைகளை எதிர் கொள்ளும் கட்டாயத்தில் இருக்கிறோம். ஒரு புறத்தில் கோவிட் 19 எம்மிடையே குழப்பங்களை ஏற்படுத்தி வருகிறது. மறுபுறத்தில் அரசின் அடக்கு முறைகளைப் பல வழிகளிலும் எதிர் கொள்ள வேண்டி உள்ளது. (கவனியுங்கள். இந்த அரசைக் கோவிட் 19 உலகப் பெருந் தொற்று நோயின் கொடுமைகளுடன் ஒப்பிட்டார்)

தனிப்பட்ட முறையில் இவற்றைப் பேசுவதற்காக இன்னும் ஓரிரு நாட்களில் குற்றவாளியாக நிறுத்தப் படலாம்:-

1. தமிழ் மொழி இந்தத் தீவின் ஆதிக் குடிகளின் மொழி.

2. மகாவம்சம் ஒரு வரலாற்று ஆவணம் அல்ல:

3. ஸ்ரீலங்கா அரசின் அடக்குமுறை மற்றும் பக்கச் சார்பு நடவடிக்கைகள் காரணமாக எல்.ரி.ரி. ஆயுதங்களை எடுத்தது:

4. முள்ளி வாயக்கால் போர் முடிவில் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் கொல்லப் பட்டார்கள்:

5. வடக்கை ஆயுதப் படைகள் அரச பொதுப் பணிகளை தமது கைகளில் எடுத்து, வடக்கை இராணுவ ஆட்சியில் வைத்திருக்கிறது.

இவை எல்லாமே உண்மைகள். ஆனால், குற்றங்களாக மாற்றப் பட்டுள்ளன. இவற்றை நான் பேசுவதால் நான் தேசிய வெறுப்பையும், இனவெறுப்பையும் ஊக்குவித்துப் பேசுவதாக, வன்முறைகளைத் தூண்டுவதாக எனக்குச் சொல்கிறார்கள்.”

இந்த நவீன சாக்கிரட்டீசை, கார்ள் மாக்ஸை, லெனினை ஆபிரகாம் லிங்கனை, மகாத்மா காந்தியை மார்ட்டின் லூதர் கிங்கை, ஏசு கிறிஸ்துவை எந்த நீதிமன்றத்தில், என்ன தண்டனை வாங்கி, எந்தச் சிலுவையில் ஆணி அடிப்பது? இதுதான் இன்றைய சிங்களத்தின் திரிசங்கு சொர்க்க நிலை.!



# என்ன கொடுமை சரவணா!...



கல்லெறி வேலுப்பிள்ளை

**வணக்கம் பாருங்கோ, எப்பிடி சுகமா இருக்கிறியளே...?**

**வருசமும் முடியப்போகுது கண்டியளோ. ஆனால் போன வருசம் இருந்த சிக்கலும் பிரச்சனையும் இனிவரப்போற வருசத்திலையும் தொடரப்போகுதோ எண்டொரு கேள்வி எழாமல் இல்லை பாருங்கோ. ஏனெண்டால்; பிரச்னைகளைத் தாங்களாகவே உருவாக்கி, அதைப் பிற மனிதர்களின்ர தலையில கட்டிவிட்டு, சமூகத்துக்குள்ள பிளவுகளை உண்டாக்குற ஆக்கள் இன்னும் நிறையப்பேர் இருக்கினம் கண்டியளோ.**

குருக்கள் விட்டா குற்றமில்லை, சீடப்பிள்ளை விட்டால் குற்றம் எண்டொரு ஊர்வழக்கு பொய்யில்லை கண்டியளோ. தமிழருக்கு இது மிகவும் பொருந்தும் பாருங்கோ, அதுவும் புலத்தில் வாழ்கின்ற தமிழருக்கு இது இன்னும் பொருந்தும் பாருங்கோ.

என்னடா இவன் புலத்தில உள்ள தமிழரைத் தான் வம்புக்கு இழுக்கிறான் எண்டு யோசியாதேங்கோ. அதுக்கும் காரணம் இருக்கு. ஏனெண்டால், தாயகத்தில இராணுவ அடக்குமுறைக்குள்ள வாழுற சனத்தைவிட, புலத்தில வாழுற சனமும் அடக்குமுறைக்கு உள்ளாகுது எண்டது கனபேருக்கு தெரியுறேல்லை கண்டியளோ. வெளிநாடுகளில் வாழுற எங்கட சனம், சிலவிடயங்களில ஒன்றாகக்கூடி வேலைசெய்யவேண்டிய தருணங்கள் பல இருக்கு. கலை, கல்வி, சமய, விளையாட்டு நிகழ்வுகளில எங்கட ஆக்கள் தமிழராகக்கூடி செய்யுற வேலைகளில பிளவுகளை உண்டாக்கிவிட்டு, பிளவுகளை உண்டாக்கியவர்களே அதை பிறரின் குற்றமாகச் சொல்லி அறிக்கை விடுற கூத்தெல்லாம் இப்ப இஞ்ச அதிகமாப்போட்டுது பாருங்கோ.

புலத்தில இருக்கிற தமிழ்ச் சனத்தை ஒண்டாக்கி, ஒரு பலமாகத் திரட்டி வைச்சிருக்கவேணும் எண்டு தேசியத் தலைவர் கண்ட கனவிற்கு முரணாக, அவரால் உருவாக்கப்பட்ட அமைப்பிலிருந்தே அடாவடித்தனம் செய்யும் காளான்கள் பற்றித்தான் நான் சொல்லுறன் பாருங்கோ

விசயம் என்னெண்டா பாருங்கோ, தலைவரால் உருவாக்கப்பட்டு நெறிப் படுத்தப்பட்ட அமைப்பைக் குழப்புறத்துக் கெண்டே 2009 இற்குப் பிறகு உள்நுழைந்த நபர்களால தான் பல

பிரச்சனைகள் இஞ்ச உருவாகுது பாருங்கோ. யார் இப்படியான ஆட்களை நியமிச்சது எண்டது கூடத் தெரியாமல், அவங்களை பொறுப்பாளர்களாக ஏற்றுக்கொண்ட நபர்களிலையும் குற்றம் இருக்குது பாருங்கோ.

செய்யுறது முழுக்கப் பிழை எண்டு தெரிஞ்சும், அவர்களைத் தொடர்ச்சியாக பொறுப்பாளர்களாக ஏற்றுக்கொண்டு அமைதியாக இருக்கிற மந்தைகளை உந்தப் பொறுப்பாளர்கள் இலகுவாக மேய்ச்சுப் போடுவாங்கள். ஏனெண்டால் பிழை எண்டு தெரிஞ்சாலும் "கட்டமைப்பு உடையக் கூடாது" என்ற தாரக மந்திரத்தைத் தலையில் சுமக்கும் மந்தைகள் இருக்கும் வரை, கட்டமைப்பு மட்டுமல்ல அத்திவாரமும் கிளறி எறியப்படும் எண்டுறது யாருக்கும் விளங்கேல்லை.

உப்ப கிட்டடியில நடந்த ஒரு விசயத்தைச் சொல்லுறன் கேளுங்கோ, தமிழீழ விடிவுக்காக நீண்டகாலமாக புலத்தில செயற்பட்டு வந்த ஓர் செயற்பாட்டாளர் மேல, ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கிறம் எண்டு ஒரு மேத்திரி அறிக்கை விடுகுது. அந்த மேத்திரி 2010 இற்குப் பிறகு தானாகப் பொறுப்பாளர் ஆன மேத்திரி. அந்த மேத்திரி எந்தெந்த வீடுகளைக் கொளுத்தவேணும் எண்டு தீர்மானிக்கிறது அவரின்ர மந்தி(ரி). அந்த மந்தி(ரி) எந்த வீட்டைக் கொளுத்தச் சொல்லுறாரோ, அந்த வீட்டை மேத்திரி மறுகேள்வியில்லாமல் கொளுத்திப் போடுவார். ஏனெண்டால் மந்தி(ரி)யின்ர துணையில்லாமல் மேத்திரியால கதிரையில இருக்க முடியாது கண்டியளோ.

அப்பிடித்தான் உந்த ஒழுக்கை ஆற்றுற நடவடிக்கையும் நடந்தது. ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கிற அளவுக்கு அந்தச் செயற்பாட்டாளர் என்ன செய்தவர் எண்டு கேட்டால் மயக்கம் வந்து குப்புற விழுந்து போடுவியள் பாருங்கோ. தமிழர் வரலாற்றைத் துவம்சம் செய்து, சீரழிச்சு வெளியிடப்பட்ட பாடப் புத்தகத்தை அந்தச் செயற்பாட்டாளர் ஏற்கமறுத்தது தான் காரணம் பாருங்கோ. அதாவது மேத்திரி குடுத்த விசத்தை அந்தச் செயற்பாட்டாளர் சாப்பிடேல்லை எண்டதுக்காக, ஒழுக்கை ஆற்றி நடவடிக்கை எடுத்தவையாம் எண்டு அறிக்கை விட்டிருக்கினம்.

இதில பெரிய பகிடி என்ன தெரியுமே? அறிக்கையில கையெழுத்து வைச்ச மேத்திரிக்கும் , அதுக்குத் திட்டம் போட்டுக்குடுத்த மந்தி(ரி)லயும் இருக்கிற ஒழுக்குகளுக்கு நடவடிக்கை எடுக்க வெளிக்கிட்டால் இரண்டு பேருக்கும் மின்கம்பத் தண்டனை தான் கிடைக்கும் பாருங்கோ. நான் வழமையாச் சொல்லுற மாதிரி, புலிகள் இல்லாமற் போனது சிங்களவனுக்கு சந்தோசமோ இல்லையோ, இப்படியான மேத்திரிகளுக்கும், மந்திரிகளுக்கும் மாபெரும் சந்தோசம் பாருங்கோ.

ஏனெண்டால் தனக்கு வால்பிடிக்கிறவன், தனக்கு ஏற்றமாதிரித் தாளம் போடாதவன் எல்லாரையும் துரோகி, ஒழுக்கமற்றவன் எண்டு பட்டம் குடுத்து வெளியில விடுறதுக்கு யாரட்டையும் அனுமதி எடுக்கத் தேவையில்லைத் தானே பாருங்கோ. அதே கையோட இப்ப மாவீரர் நாளுக்கு வீடு வீடாகப் போய் நிதி திரட்டுறதுக்கு, திரிபு படுத்தப்பட்ட பாடப் புத்தகங்களையும் தூக்கிக்கொண்டு திரியுற நிலைமையாப் போச்சுது பாருங்கோ. பாடப் புத்தகங்களில உள்ள திரிபை எதிர்த்து, பாடப்புத்தகங்களை ஏற்க மறுத்த ஒரு செயற்பாட்டாளருக்கு ஒழுக்காற்று நடவடிக்கை எண்டு அறிக்கை விட்டுட்டு, மாவீரர் நாளுக்கு காசு திரட்டுறதுக்கு ஏன்ராப்பா பாடநூலைத் தூக்கித் திரியுறீங்கள்



எண்டு யாரும் கேட்டால் என்ன பதில் சொல்லுவானுகளோ?

அதுமட்டுமில்லை பாருங்கோ, திரிபுபடுத்தப்பட்ட பாடநூலுக்கு எதிராகக் குரல் கொடுத்து, அதை ஏற்கமறுத்த செயற்பாட்டாளருக்கு ஒழுக்காற்று நடவடிக்கை நடவடிக்கை என்று அறிக்கைவிட்டும், அந்த நகரத்தைச் சேர்ந்த மக்கள் யாரும் தடம் மாறாமல் அந்தச் செயற்பாட்டாளரோடு நிண்டது மேத்திரிக்கும் மந்திரிக்கும் பெரிய மூக்குடைவாப் போச்சுதாம் பாருங்கோ.

வீடு வீடாக அழைப்பெடுத்து, நாங்கள் இஞ்ச புதுப்பள்ளிக்கூடம் திறக்கப்போறம் வாருங்கோ வாருங்கோ எண்டு கச்சான் விக்கிற கணக்கில கூவியும் யாரும் அந்தப்பக்கம் போகேல்லை பாருங்கோ. திடீரெண்டு அந்த நகரத்துக்குள்ள புகுந்து, கூட்டம் வைக்கிறம் எண்ட பெயரில மேலிடம் கீழிடம் எல்லாம் சேர்ந்துவந்து காவல் இருந்தது தான் மிச்சம். ஒரு சிலரை சிலநேரங்களில ஏமாத்தலாம், ஆனால் எல்லாரையும் எல்லாநேரத்திலயும் ஏமாத்த முடியாது எண்டதுக்கு உதைவிடச் சிறந்த உதாரணம் இல்லை பாருங்கோ.

மிகச் சிறப்பாக 2009 வரை இயங்கிய கட்டுக்கோப்பான நிர்வாகத்தைச் சீரழிக்குற மாதிரி, தங்களுக்கு ஒவ்வாத நபர்களுக்கு மேல ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குற இவங்களையெல்லாம் மக்கள் அடித்துத் துரத்தும் காலம் வரும். 2009 இற்கு முதல் ஆர்மேல எண்டாலும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கிறதெண்டா அது தொடர்பான விபரம் தாயகத்திற்குத் தெரிவிக்கப் பட்டு, நன்கு ஆராயப்பட்ட பிறகுதானே அதுதொடர்பான அறிக்கை வெளிவாறது வழமை.

ஆனால் இப்ப என்னவெண்டால், தாயகத்தில இருந்து உருவாக்கப்பட்ட அமைப்புக்குள்ள தன்னிச்சையாக இருந்துகொண்டு எவருடைய அனுமதியும் இல்லாமலே, விசர் நாய் கண்டபடி ஆக்களைக் கடிக்கிற மாதிரி எடுத்த உடன ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கிற கூத்து நடக்குது. மக்களும் இதை உணரத் தொடங்கீட்டினம். தாங்களே தன்னிச்சையாக நீ வெளில போ எண்டு ஆக்களைக் கலைக்கிறது, பிறகு என்னவெண்டால், அவர் கட்டமைப்பை உடைக்கிறார் எண்டு பிறரில குற்றம் சாட்டுறது.. என்ன கேவலமான சிந்தனை உள்ள பிறவியள் நீங்கள் எண்டு இப்ப எல்லாருக்கும் தெரிஞ்சுபோச்சு.

தமிழீழத்திற்கான போராட்டம் எண்டுறது அஞ்சலோட்டத்துக்கு ஒப்பானது கண்டியளோ. ஒருவர் பின் ஒருவராகத் தொடர்ந்து ஓடவேணும். இதில ஒருத்தன் தன்னை விட நல்லா ஓடுறான் எண்டால் அவனுக்குத் துரோகிப் பட்டம் கட்டி வெளியில அனுப்புறது தான் இப்ப புலத்தில நடக்குது. இதுக்கு மருந்து மக்களின்ர கையில தான் இருக்குது பாருங்கோ.

**என்னதான் நடக்கும்**
**நடக்கட்டுமே!**
**இருட்டினில் நீதி மறையட்டுமே!**
**தன்னாலே வெளிவரும்**
**தயங்காதே !**
**ஒரு தலைவன் இருக்கிறான்**
**மயங்காதே!**

**- அப்ப வரட்டே**



# Jaffna Stores

**Geschäftsführer : Herr Thayaharan Nadarajah**

ENESAR N.S.R. என்னஸ்ஸார்

தயாரிப்புகளின்
ஏக விநியோகஸ்தர்கள்

மொத்தமாகவும்,
சில்லறையாகவும்
NSR தயாரிப்புகளை
விற்பனை செய்ய
விரும்புவோர்
தொடர்புகொள்ளுங்கள்

25
ஆண்டுகளாக
உங்களோடு நாங்கள்...

## மண்மணம் மாறாத சுவைதரும்
## தரமான என்.எஸ்.ஆர். தயாரிப்புகள்

வாடிக்கையாளர் அனைவருக்கும்
நத்தார், புதுவருடம், தைப் பொங்கல்
நல்வாழ்த்துகள்

ஆசியா, ஆப்பிரிக்கா, சீனா நாடுகளின் அனைத்து விதமான
உணவுப் பொருட்களுடன் மரக்கறி வகைகள், மீன் வகைகள்,
இறைச்சி வகைகள் அனைத்தையும் தரமாகவும், மலிவாகவும்
பெற்றுக் கொள்ள பீல்பெல்ட் நகரில் ஒரு மாபெரும் நிறுவனம்




**www.jaffnastores.com**
**info@jaffnastores.de**

**Tel. - 0521 174794**
**Mobile - 01732807906**

**Feilenstraße 8**
**33602 Bielefeld**

Smt. லிதியா மயூரன், சுவிஸ்

# தாண்டவம் லாஸ்யம்



சென்ற வாரம் அகரம் இதழில், புராண வரலாறு பற்றிப் பார்த்தோம். அதில் தாண்டவம்; லாஸ்யம் என இரு செட்களைக் குறிப்பிட்டேன். இந்த வாரம் தாண்டவம் மற்றும் லாஸ்யம் பற்றி படிப்போம்.

### தாண்டவம்

சைவ சமயத்தவர்களின் முழுமுதற் கடவுளான சிவன் / நடராஜர் வடிவத்தில் இந்த நடனத்தை ஆடியபடி சித்தரிக்கப் படுவது குறிப்பிடத்தக்கது. சிவபெருமான் ஆடும் நடனம் 'தாண்டவம்' என்று சொல்லப்படுகிறது.

தாண்டவத்தை சிவன் உருவாக்கினார் என்று புராணங்கள் கூறுகின்றன. ஆண்மை, கம்பிரம், வீரம் மற்றும் உக்கிரமும் கொண்டு அங்கங்களை அசைத்துப் பாட்டின் பொருளுக்கு ஏற்றபடி ஆடுவது தாண்டவம் ஆகும்.

108தாண்டவம் ஆகத் தொடங்கி, பின்னர் 64 தாண்டவங்கள் என்னும், அவைகளில் 9 தாண்டவம் தான் முக்கியமானவை என்றும், பின்னர் அதுவும் குறுகி 7 தாண்டவங்களே பிரசித்தி பெற்றது.

இவை சப்த தாண்டவம் ஆகும். இந்தத் தாண்டவங்கள் சிவனால் ஒவ்வொரு சூழ்நிலைகளில் ஆடப்பட்டது. இந்தத் தாண்டவங்களை நமது ஆலயச் சிற்பங்களில் காணலாம்.

தாண்டவம் என்பது எப்படி வேண்டுமானாலும் குதிப்பது அல்ல. மேலே கூறியது போல், தாண்டவத்தைத் தாளத்தோடும், ஆண்மைக்குரிய கம்பீரத்தோடும் கௌரவம் சிறிதும் குறையாமல் கலை மெருகோடு விளங்க வேண்டும்.

**1. ஆனந்தத் தாண்டவம் :** சிதம்பரத்தில் தில்லை கனகசபையில் சிவன் ஆடிய ஆடல். இது பஞ்ச கிருத்தியங்களைக் குறிக்கும்.

**2. முனி தாண்டவம் / காளிகா தாண்டவம் :** திருநெல்வேலி, தாமரை சபையில் சிவன் ஆடியது. இது படைத்தல் தொழிலைக் குறிக்கும்.

**3. கௌரி தாண்டவம் :** திருப்புத்தூர், சித்திரை சபையில் சிவன் ஆடியது. இது காத்தல் தொழிலைக் குறிக்கும்.

**4. சந்தியா தாண்டவம் :** மதுரை வெள்ளியத்தில் சிவன் ஆடியது. இன்பம் பார்த்தலைக் குறிக்கும்.

**5. ஸம்ஹர தாண்டவம் :** நள்ளிரவில் மயானதில் சிவன் ஆடியது. இது அழித்தல் தொழிலைக் குறிக்கும்.

**6. திரிபுர தாண்டவம் :** குற்றாலத்தில், சித்திரை சபையில் சிவன் ஆடியது. இது மறைத்தல் தொழிலைக் குறிக்கும்.

**7. ஊர்த்துவ தாண்டவம் :** திருவாலங் காட்டில் இரத்தின சபையில் சிவன் ஆடியது. இது அருளல் தொழிலைக் குறிக்கும்.

| | |
|---|---|
| **சிவன் தாமாக ஆடியது** | 48 |
| **சிவன் உமையோடு ஆடியது** | 36 |
| **சிவன் மாயவனுடன் ஆடியது** | 9 |
| **சிவன் முருகனுக்காக ஆடியது** | 3 |
| **சிவன் தேவர்களுக்காக ஆடியது** | 12 |
| **மொத்த தாண்டவங்கள்** | 108 |

### லாஸ்யம்

லாஸ்யம் என்றால், பெண்களால் ஆடப்படும் நடனம். பெண்மையின் மென்மையைப் புலப்படுத்துவது 'லாஸ்யம்' ஆகும். லாஸ்யத்தைப் பார்வதி தேவி உருவாக்கினர் என்று புராணங்கள் கூறுகின்றன.

பார்வதி தேவியின் அழகு, அருள், நளினம் இவற்றை மனத்தில் கொண்டால், லாஸ்யத்தின் இயல்பு புலனாகும்.

லாஸ்யத்தில் இருவகை உண்டு: 1. சுரித்தர் நாயகன், நாயகி இடையே ஏற்படும். 2. எவரித்த; ஆண்களை கவர பெண்களால் ஆடப்படும்.


தாண்டவத்திற்கும், லாஸ்யத்திற்கும் தனித் தனி அடைவுகள் இல்லை. அடைவுகளைக் கையாளும் விதத்தில்தான் வேறுபாடு உண்டு. தேவையான போது, ஒரு பெண் தாண்டவத்தையும், ஒரு ஆண் லாஸ்யத்தையும் ஆடலாம். பாத்திரத்திற்கேற்ற வண்ணம் மாற்றி கொள்ளலாம்.

**உலகியல் வரலாறு**
**அடுத்த இதழில்**



# உள்ளம்

## திறக்கும் உண்மைகள்



“உளம் திறக்கும் உண்மைகள்...” என்ற தலைப்பில் உங்கள் மனதிலிருக்கும் புதிய சிந்தனைகளை 4 - 6 வரிகள் கொண்ட கவிதையாக்கி எமக்கு அனுப்பி வையுங்கள்.

### ஏழையின் தேவை...

ஏழை
விளை நிலங்களை
விலை நிலமாக மாற்றி
அணையாத பசியின் நெருப்பை
ஏழை விவசாயி வயிற்றில் ஏற்றி
வேடிக்கை பார்க்கும்
உலகமடா இது...

கோடி கோடியா
பணக்கட்டு வேண்டாம்
வயிற்று பசி தீர
உணவிருந்தால் போதும்
இது ஏழையின் தேவை...

உணவை கொட்டும் போது
சுற்றும் முற்றும் பார்
அதன் தேவை யாருக்கு என்று
அப்போது புரியும்...

● நந்தினி, இலண்டன்

### மலையகம்

அற்புதமான காட்சி பார்க்க
பார்க்கப் பார்க்க தூண்டும்
பச்சைப் பசேல் தேயிலை தோட்டங்கள்
குறுக்கே ஊடறுக்கும் தொடருந்து
தொடர்ந்து செல்லும் சுற்றி
சுற்றி ராட்டினம் போல
மலைமகளிடம் என்ன வேண்டுதலோ?

### பெண்மை

ஆயிரம் தான் சொல்வீர் உலகத்தீர்
அண்டத்தில் உயர்ந்தது பெண்மையே!
தாயாய் தாரமாய் சேயாய்
தங்கமனதைக் குளிர்விக்கும் பாவையடா

### விழும் மழைத்துளிகள்...

பலமான காற்றுடன் வேகமாக வா
பாரெங்கும் படம் எடுக்கும் மின்னலே!
கூட்டி வா உன் காதலியை
கூட்டணி சேர்ந்து உலகை கலக்கி
அசுத்தம் களைய ஆடி வா
என் ஊர் சிறுவர்கள் கப்பல் விட நீரை
சிறு கடலென அள்ளி தா!

● **ரஜிதா அரிச்சந்திரன்**
**அபிவிருத்தி உத்தியோகத்தர்,**
**பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்.**

### ஈழம்

தாய் - தந்தை தந்தாய்
பசியாற உணவு, நீர் தந்தாய்
நிம்மதியாய் உறங்க மட்டும் - உன்
மடி தர ஏன் மறந்தாய்?
கடல் தாண்டி பல இதயம் -உன்
நினைவாய் என்றும்

● **ஜெயராய்- நிரோயா**
**அம்ஸ்ரடாம், நெதர்லாந்து**



# அகர கவிக்களம்....



## உச்சம்!..

மழை ஒழுக்கில் குழந்தை
கஞ்சி குடிக்க வழியில்லை
வறுமையின் உச்ச நிலை
ஏசியில் உறங்கும் பணக்காரன்!..

## பெருமிதம்!..

தமிழ்மொழி நாள்
விழாக்கோலம் பூண்டது
ஆங்கிலத்தில் அறிவிப்பு
படித்தவர்கள் பெருமிதம்!..

## வேட்பாளர்!..

தேர்தல் திருவிழாவில்
தேன் ஊறும் வார்த்தைகள்
தேர்தல் முடிந்ததும்
தேடுவாரற்ற வாக்காளர்!..

## கொரோனா முத்தம்!..

பேரக்குழந்தை ஓடிவந்து
முத்தமிட மறுக்கிறது
பெற்றமகள் கிட்டவரவில்லை
அந்நியமான பாட்டன் பாட்டி!..

**வைரமுத்து சிவராசா, யேர்மனி**

## உலகம்

இந்த மாய உலகில் எதையும்
கடந்து போக கற்றுக்கொள்
காயங்கள் உன் நியாயத்தின்
அடையாளம்
வாழ்ந்தேனா வீழ்ந்தேனா
என்பது குறித்து கவலைப்படாதே
முயற்சித்தேன் முன்னேறினேன்
எனது இந்த நொடியே நிரந்தரம்
என வாழ்ந்து

## உணர்ச்சி

ஏதோ ஒன்று அல்லது
யாரோ ஒருவரை
குறை கூறுவதை விட்டு
ஏற்றுக்கொள்ளும்
தன்மையைக் கொண்டு
வாழ்விற்கு செயல்விடை
அளிக்கும் பொறுப்பை
எடுத்துக்கொள்ளத்
தொடங்கும் போது
நம் உணர்ச்சிகளை
நிர்வகிக்கத் தொடங்குகிறோம் .......

**பாமினி**



## மனித நேயம்

வாழ்வியல் இடத்தில் வாழும் மனிதர்.
போட்டி பொறாமையால் வெந்து வேகுகிறார்.
தமிழுக்குத் தொண்டாம்
தமிழினத்திற்குள் பிளவாம்.
சங்கதிகள் பலதோன்றி
சங்கடத்தில் இருக்கின்றன.
வேங்கடம் வாங்க வங்கம்
விற்றாலும் விற்கலாம்,
விற்பார் சொல்ல முடியாது.

**கெங்கா ஸ்ரான்லி**



ஆய்வாளர் சேது, அமெரிக்கா

# தமிழீழ விடுதலைப் போரும், கற்றுக்கொண்ட பாடங்களும்

பாகம் – 21

> வரலாறு கூறும் பாடம் என்னவென்றால், நம்பிக்கையில்லாமல் நம்மால் வெற்றிகரமாக அடுத்த கட்டத்திற்கு நகர முடியாது. அவ்வாறான நம்பிக்கையை எப்படிப் பெறுவது?

முதலில் 2009-ஐ நமது வரலாற்றில் சரியாக நம்பிக்கையுடன் பதிவு செய்யவேண்டும். 2009-ஐ தோல்வி என்று எடுத்துக் கொண்டால், நம்மை யாரும் காப்பாற்ற முடியாது. எதிரியும் அதைத்தான் விரும்புவான். பரணி கிருஷ்ணரஜனி அவர்களின் பார்வை இவ்விடத்தில் சரியானது. 2009 நிகழ்வுகளை முள்ளிவாய்க்கால், நந்திக்கடல் என்று இரண்டாகப் பிரிக்க வேண்டும். முள்ளிவாய்க்கால் என்பது சிங்களமும், உலக நாடுகளும் இணைந்து நடத்திய இனப்படுகொலையைக் குறிப்பது.

இதைக் கொண்டு அவர்களைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்துவதற்கு தொடர் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். நந்திக்கடல் என்பது போராளிகளும், மக்களும் விடுதலைக்காக இறுதிவரை களமாடியதைக் குறிப்பது. இதை எக்காரணம் கொண்டு தோல்வி என்று ஏற்கமுடியாது. கிரேக்கர்களின் தெர்மாப்பிளையோ அல்லது யூதர்களின் மாசாதவோ தோல்வி என்று பதியப் படவில்லை. அவை மகத்தான வெற்றிகளாகவே பதியப்பட்டுள்ளன.

இதுபோன்ற நிகழ்வுகள் காலம் முழுவதும் எதிரொலித்து, ஒரு இனத்தைக் காத்து இயக்கும் வல்லமை கொண்டது. அதனால் நந்திக்கடலின் எதிர்கால விளைவுகளைக் கருத்தில் கொண்டு, அதை ஒரு மகத்தான வெற்றியாகவே பதியப்பட வேண்டும். அதையேத்தான் இறந்த மாவீரர்களும் விரும்புவார்கள். இந்த வெற்றி மனநிலையே நம்மை அடுத்த கட்டத்திற்கு நம்பிக்கையுடன் நகர்த்தும் உந்து சக்தியாக இருக்கும். எவ்வாறு கிரேக்கர்களும், யூதர்களும் மீண்டார்களோ?, அதுபோன்ற மீட்சிக்கு வழிவகுக்கும்.

எந்த ஒரு குழு நம்பிக்கையையும் ஒரு சமூகமாக இணைந்துதான் தக்கவைக்க முடியும். புலிகளும், யூதர்களும் ஒரு தனிப்பட்ட சமூகமாக இருந்ததனால்தான் அவர்களது நம்பிக்கையைத் தக்கவைக்க முடிந்தது. இன்றைய நமது சமூகம் பல மூடநம்பிக்கைகள் கொண்டு, உள்ளுக்குள் பல முரண்களைக் கொண்டு, ஒருவரை ஒருவர் நண்டு போல பின்னுக்கு இழுத்து, தேவையில்லாத இடங்களில் தனது ஆற்றலை வீணடிக்கும் சமூகம். இதுபோன்ற

பண்பாட்டைக் கொண்டு எதுவும் செய்ய முடியாது என்பதை உணர்ந்துதான் புலிகள் புலிப் பண்பாட்டை உருவாக்கினர்.

ஒரு சமூகம் ஒரு பேரிடரை / பேரிழப்பைச் சந்தித்தபின், தன்னை பலப்படுத்திக் கொள்ள மறுசீரமைக்கும். இதை ஏற்கனவே பகுதி-1 - இல் விரிவாகப் பார்த்தோம். யூதர்கள் தங்களின் பின்னடைவிற்கு எதிரிகளையோ அல்லது விபத்துகளையோ குற்றம் சாட்டவில்லை, மாறாக 'பிழை தங்களின்மீதே உள்ளது' என்று எடுத்துக் கொண்டார்கள்.

அதனால் புதிய சூழலுக்கு ஏற்றபடி அவர்களின் சமூகத்தை மறுசீரமைத்து முன்னேறினார்கள். பரிணாமத்தில் எந்த உயிர் அல்லது அமைப்பு தனது சூழலுக்கு ஏற்ப தகவமைத்துக் கொள்கிறதோ, அதுவே வெற்றி பெறுகிறது. அந்த வகையில் யூதர்கள் தங்களின் மீது பழியை எடுத்துக் கொண்டு, மறு சீரமைத்ததே சிறந்த உத்தி. இதுவும் அவர்களின் வெற்றிக்கான ஒரு காரணம்.

2009-இல் இனவழிப்பிற்கு காரணமாக நாம் "திமுக முதல் ஐ.நா வரை திட்டித் தீர்த்து விட்டோம்". ஆனால், நாம் ஏற்றுக்கொள்ள வேண்டிய உண்மையான காரணம் என்பது, நாமாகிய மக்கள்தான். தமிழ்நாட்டில் 6 கோடி மக்களாக இருந்தும், இறுதி ஈழப்போரில் எந்த உதவியும் செய்யாமல், 'மானாட மயிலாட' பார்த்துக் கொண்டிருந்தோம். நமக்கில்லாத அக்கறை ஏன் ஐ.நாவுக்கு இருக்கவேண்டும்? அடிப்படையில் 'ஒரு கடைந்தெடுத்த கேவலமான சமூகம் நாம்' என்ற உண்மையை ஏற்றுக் கொண்டு, நாம் மாறிய சூழலுக்கு ஏற்ப எது மாதிரியான சமூக மறுசீரமைப்புகளைக் கொண்டு வரவேண்டும்? என்று சிந்திக்க வேண்டும்.

அவ்வாறு சீரமைக்கவில்லை என்றால், இன்னொரு இனவழிப்பு நடந்தாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை. அவ்வாறான மறுசீரமைப்புக்குப் புலிகளின் வரலாறு எவ்வாறு பயன்படும்? என பகுதி-1 இல் விரிவாகப் பார்த்தோம்.. அதை நோக்கி செயல்படவேண்டியது அவசியம். அவ்வாறான சமூகமே எதிர்காலத்தை நம்பிக்கையுடன் துணிந்து எதிர்கொள்ளும்.

இறுதி ஈழப்போரைப் பற்றி அலசும் பொழுது, சிலர் மேற்கொள்ளும் ஒரு தவறான முடிவு என்னவென்றால், புலிகள் தங்கள் இலக்கை அடைய முடியவில்லை, அதனால் அவர்களின் ஒட்டுமொத்த உத்திகளும் தவறு என்று. இது ஒரு தவறான மிக மிக எளிமையான பார்வை. நமது இலக்கு என்ன?, அதை அடைய என்ன செய்யவேண்டும்? ஆகியன தெளிவாக, எளிமையாக இருக்கும் பொழுதே ***(linear problems)*** இதுபோன்ற பார்வை பொருந்தும்.

ஒரு நாட்டை எப்படி அடைவது? போரை எப்படி வெல்வது? என்பது கடுமையான தொகையற்ற சிக்கல்கள் ***(nonlinear complex problems).*** எளிமையான பார்வை இதற்குப் பொருந்தாது. மேலும் இதுபோன்ற சிக்கல்களில் சரியா? தவறா? என்ற கேள்வியே தவறானது. நாம் கேட்க வேண்டிய கேள்வி என்னவென்றால், "யார் அதிக சிக்கலுடன் செயல்படுகிறார்கள்?" என்பதுதான். உதாரணமாக ஒரு சிங்கம் மனிதனைவிட பலமானது, ஆனால், ஏன் அது கூண்டினில் இருக்கிறது? அது தவறான உத்தியைப் பயன்படுத்தியதனால் அல்ல, மாறாக மனிதர்கள் அதிக சிக்கலான முறையில் செயல்படுபவர்கள் என்பதனால்தான். சிங்கம் பலமானது. ஆனால், சிக்கலானது அல்ல. ஒரு சிங்கம் ஒரு மனிதனைக் கொல்ல வேண்டுமானால், வெட்ட வெளியில் ஆயுதமற்ற மனிதனைப் பார்க்க வேண்டும். மாறாக மனிதன் சிங்கத்தைக் கொல்ல அல்லது அடக்க வேண்டுமானால், எத்தனையோ வகைகளில் செய்யலாம்.




யார் நிறைய வேறுபட்ட உத்திகளைப் பல்வேறு வகைகளில் பயன்படுத்தி, அதிக வாய்ப்புகளை உருவாக்குகிறார்களோ அவர்களே சிக்கலானவர்கள். நாம் எப்பொழுது நமது சிக்கல் தன்மையை அதிகரிக்கிறமோ, அப்பொழுது நாம், நமது சூழலை கட்டுப்படுத்தும் தன்மையை அடைகிறோம். நமது வெற்றி வாய்ப்புகள் கூடுகிறது. அதனால் உத்திகள் நல்லவையா? கெட்டவையா? என்பதை, அவை நமது சிக்கல் தன்மையைக் கூட்டுகிறதா? இல்லையா? என்பதே தீர்மானிக்கிறது.

புலிகள் இயக்கம் ஆரம்பித்ததிலிருந்து கிடுகிடுவென பல்வேறு படைப்பிரிவுகள், உளவுப்படை, கடற்படை, விமானப்படை, உள்நாட்டு வெளிநாட்டு அரசியல் அமைப்புகள் என வளர்ந்தார்கள். அவர்கள் தொடர்ந்து கற்று உத்திகளையும், அமைப்புகளையும் வளர்த்து சிக்கல் தன்மையைக் கூட்டிக்கொண்டே வந்தார்கள்.

அவர்கள் பலம்வாய்ந்த இந்திய, இலங்கை இராணுவங்களை தோற்கடித்ததிற்குக் காரணம், புலிகள் எதிரிகளை விட அதிக வாய்ப்புகளை உருவாக்கும் சிக்கலான அமைப்பு என்பதால்தான். அப்படி இருந்தும் ஏன் இறுதிப் போரில் வெல்ல முடியவில்லை? என்ற கேள்வி எழுகிறது. இதற்குக் காரணம் புலிகளின் உத்திகள் அல்ல. அவர்கள்தான் உத்திகளின் முன்னோடியாகவே இருந்தார்கள். உலக நாடுகள் புலிகளின் மீதான தடைகள், புலிகளின் பொருளாதார முடக்கம், இலங்கைக்கு உத்திகள், உளவு, இராணுவத் தளபாடங்கள் எனச் செய்த உதவிகள், புலிகளின் சிக்கல் தன்மையைக் குறைத்தும், இலங்கையின் சிக்கல் தன்மையைக் கூட்டியதுதான் காரணம்.

புலிகள் போன்ற சிக்கலான இயக்கம் இந்திய துணைக்கண்டத்தின் நவீன வரலாற்றில் இதுவரை தோன்றியதில்லை. திராவிட இயக்கத்தைப் புலிகளுடன் ஒப்பிடும்பொழுது, அதற்கு பலமும் கிடையாது, சிக்கலும் கிடையாது. இந்திய, இலங்கை நாடுகளை உருவாக்கியது வெள்ளையர்களே!, இன்றைய ஆளும் வர்க்கம் கிடையாது. அடிப்படையில் இந்த நாடுகள் உருவானது ஒரு மாறிய உலக ஒழுங்கின் விளைவாக ஏற்பட்ட அமைதியான ஆட்சி மாற்றத்தின் விளைவாகவே!. இந்த ஆளும் வர்க்கங்கள் புலிகளைப் போல பெரும்போர் நடத்தி, எதிரிகளை வீழ்த்திய வரலாறே கிடையாது.

சுயமாக ஒரு நாட்டை வலிமையால் உருவாக்கி ஆண்ட வரலாறும் கிடையாது. அடிப்படையில் இவர்களும் புலிகளைப்போல சிக்கலானவர்கள் இல்லை. காந்தியின் போராட்டங்கள் அளவில் பெரிதாக இருக்கலாம், சிக்கலானது இல்லை. சுபாசு சந்திரபோசின் படைகள் சப்பானின் கட்டளைப்படி இயங்கிய ஒரு இராணுவ அமைப்பே தவிர, புலிகளைப் போல தனித்து இயங்கிய அமைப்பு அல்ல. புலிகள் இந்த இமாலய சாதனையை ஒரு சிறுதொகை மக்கள் பலத்தை வைத்து, சிறிய பொருளாதார பலத்தைக் கொண்டு சாதித்து காட்டி இருக்கிறார்கள்.




# Tilda




11-10-2021 இருந்து 15-02- 2022 வரை

# 50 000€

## ஐம்பதாயிரம் ஈரோக்கள் பெறுமதியான பயணப் பரிசுகள் வெற்றி பெறுவதற்கான போட்டிகள் !

## பரிசுகளை வெல்லுங்கள்



**5000€**
பெறுமதியான 5 பயணங்கள் மற்றும்

**500€**
பெறுமதியான 50 விமானச் சீட்டுகளை வென்றுகொள்ள முனையுங்கள் !




## எவ்வாறு போட்டியிடுவது ?




1.பரிசு கூப்பன் ஒட்டிய Tilda பாஸ்மதி அரிசி பை வாங்க வேண்டும் !



2. QR குறியீட்டை "ஸ்கேன்" செய்யுங்கள் !



3.பதிவு செய்யுங்கள் !



4.வெற்றி பெற்றீர்களா என்பதை உடனே தெரிந்துகொள்ளுங்கள்!

Prize Draw, subject to purchase of Tilda products, organized by Tilda Ltd, from 11/10/21 to 15/02/22 for consumers over 18 years old living in France, Germany or Netherlands. Terms and conditions on www.tildapromotion.com



# பொய்களைப் பாடிப் பறக்கும் இருபறவைகள்...

**தமிழ் அரசுக் கட்சியும், தமிழர் தேசியக் கூட்டமைப்பும் தாமாகவே அரசியலில் இருந்து விலகுவதாக அறிவித்து விட்டுக் கலைந்து போக வேண்டும்.**

கீழே உள்ள செய்தி சுமந்திரன் இலண்டனிலிருந்து 'தெ கிந்துவிடம் 'தெரிவித்ததாக 'தி கிந்து' கூறுகிறது. அப்படியானால் இதற்குப் பின்னால் இந்திய அரசும், இலங்கை அரசும் உள்ளன என்பது வெள்ளிடை மலை. செய்தி குறிப்பிடும் நிர்மலா சந்திரகாசன் தந்தை செல்வாவின் மகன் சந்திரகாசனின் உறவா? சந்திரகாசன் பற்றி நன்கு தெரிந்தவர்களுக்கு நதி மூலமும், ரிஷி மூலமும் தெரிந்தாலும் பச்சோந்திகளின் உண்மை நிறம் தெரியாதே?

"இந்தியாவுடன் ஒத்துழைத்து இலங்கை தேசத்தில் ஒரு அரசியல் தீர்வுக்குக் கூட்டாக அழுத்தம் கொடுக்குமாறு அமெரிக்காவிடம் தமிழ் தேசியக் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாண நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தலைமையிலான குழுவொன்று, சிரேஷ்ட சட்ட நிபுணர்களான கே.கனக்-ஈஸ்வரன் மற்றும் நிர்மலா சந்திரஹாசன் ஆகியோருடன் அண்மையில் வோஷிங்டன், அமெரிக்காவின் ராஜாங்க திணைக்கள அதிகாரிகளுடனான சந்திப்பின்போது இந்தக் கோரிக்கையை விடுத்ததாக 'தெ ஹிந்து' தெரிவித்துள்ளது.

அமெரிக்கா மீண்டும், ஜெனீவா மனித உரிமைகள் பேரவைக்குத் திரும்பியுள்ள நிலையில், இலங்கையின் பொறுப்புக்கூறல் மற்றும் நீதி தொடர்பான பிரச்சனைகளுடன், தமிழ் தேசியப் பிரச்சனைக்கான அரசியல் தீர்வையும் பரிந்துரைப்பது முக்கியம் என்று, தாம் கருதுவதாக சுமந்திரன் லண்டனில் இருந்து 'தி ஹிந்து' விடம் கூறியுள்ளார்.

## சுமந்திரன், சாணக்கியன் புதிய இரட்டையர் கோஷ்டி....இந்த இருவரும் யார்?

சுமந்திரன் ஐக்கிய கட்சியின் ஆயுட்கால உறுப்பினர். சாணக்கியன் மகிந்த அணியின் கிழக்கு மாகாண பாராளுமன்ற உறுப்பினர். இவர்களில் யார், எந்த வகையில் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக இருக்க முடியும்? ஆனால், உலகத்தை அப்படி நம்ப வைத்து விட்டார்கள். யாரும் நம்பினாலும், நம்பாவிட்டாலும் அந்த அளவுக்கு நவீன அரிச்சந்திரன்கள் இவர்கள்.

தனியாக எவரும் ஆவர்த்தனம் பாடினால், கச்சேரி களையும் கட்டாது, கை தட்டல்களும் கிடைக்காது. அதனால் முதலில் வித்துவானும், பக்கப் பாட்டுக் காரரும் அடித்துத் தூள் கிளப்புவார்கள். பின்னர் பக்கவாத்தியக் கார்கள் இரண்டு, இரண்டு பேர்களாகப் பட்டையக் கிளப்பிப் பரவசப்படுத்தி விட்டு, கச்சேரியை முடித்து விடுவார்கள்.

ஈழத்தமிழர் அரசியலில் முதலில் சோடியாய் கச்சேரி செய்தவர்கள், அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியைத் தொடங்கிய திரு.ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர்களால், சிங்கப் பூரில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட திரு. செல்வ நாயகமும், கோப்பாய்த் தொகுதியில் வெற்றி பெற்ற திரு.கு.வன்னிய சிங்கமும், தமிழ் காங்கிரஸ் கட்சியை விட்டு விலகித் தமிழ் அரசுக் கட்சியைத் தொடங்கிய பொழுது, இந்த இரட்டையர் கச்சேரி தொடங்கியது.

தொடங்கப் பட்ட காரணம் மலையகத் தமிழரின் குடி உரிமை பறிப்புக்கு எதிரான அரசியலை ஜீஜீ.தொடராமல், அமைச்சுப் பதவி பெற்று, அரசுடன் ஒத்துழைத்தார் என்பதே!. அன்று தொடங்கிய இந்த இரட்டையர் கச்சேரி, தமிழரிடையே போட்டி அரசியலை வளர்த்து, தமிழ் இனத்தை சிங்களத்திடம் அடி வாங்க வைத்ததோடு அல்லாமல், வேறொன்றும் நடக்க வில்லை.

இவர்களின் அரசியல் ஆட்சியாளரிடம் சலுகைகளுக்காக அரசியல் செய்யும் தரகர்களை உருவாக்க, அவர்களுக்குத் துரோகிகள் பட்டம் வழங்கி, அவர்களை தமிழ் இளைஞர்களை கொண்டு படுகொலைக செய்து, அதே தொகுதிகளில் தாங்களும், தங்கள் கட்சிக் கார்களையும் வெற்றி பெறவைத்து அல்லது கட்சியின் நியமன உறுப்பினர்களாக்கி வளர்ந்து, இன்று தமிழர்களின் மிகப் பெரும் தனிக் கட்சி எனப் பெருமை பேசும் தமிழ் அரசுக் கட்சி.

அதன் முன்னணித் தலைவர்களான அமிர்தலிங்கம் தொடக்கம், சம்பந்தன், மாவை, சுமந்திரன் எல்லாரும் இப்படித்தான் கட்சியில் நுழைந்தார்கள். அப்படி வந்த சுமந்திரன் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆயுட்கால உறுப்பினராக



இருந்தும் கூட, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளராக, தமிழ் அரசுக் கட்சியின் தலைவராக, தானே தமிழ் இனத்தின் தனிப் பெரும் தலைவனாக உலகம் எங்கும் கூவித் திரிகிறார். தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை முன்வைத்துக் கடந்த 70 வருடங்களாக போராடிய மக்களையும், கட்சியையும் கனவிலும் அறியாத சுமந்திரன், சிங்களக் கட்சியின் ஆயுட்கால உறுப்பினராகக் காக்கையின் கூட்டில் வாழும் கள்ளக் குயில் போல, உலகம் எங்கும் கூவித் திரிய எவ்வளவு கள்ளத்தனம் இருக்க வேண்டும்?

இவர்கள் இருவரும் அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து எனப் பறந்து தமிழ் இனத்தை விலைபேசித் திரிகிறார்கள். அதனைச் சுமந்திரன் நியாயப்படுத்தும் விதம் விசித்திரமானது, வினோதமானது, விபரீதமானது. இவரும், சம்பந்தனும் தமிழர் பிரச்சினை பற்றி எங்கேயும், எவரிடமும் பேசப் போகும் பொழுது, வேறு யாரையும் கூட்டிப் போக மாட்டார்கள். என்ன பேசினார்கள்? எனக் கூட்டறிக்கையும் ஊடகங்களில் தெரிவிப்பதும் கிடையாது. மொத்தத்தில் முழுஉலகையும் மூடு மந்திரத்தால் கட்டிப் போடும் களவாணித்தன அரசியலை செய்கிறார்கள்.

எந்த முடிச்சவிக்கி, மொள்ள மாரியாலும் இப்படித் துணிச்சலான காரியங்களைச் செய்ய முடியாதே? இப்பொழுது சம்பந்தன் வயதாகி விட்டதால், சுமந்திரனுக்குத் தமிழ் மக்களின் அரசியலைச் செய்ய அவர் ஒட்டிக் கொண்டுள்ள தமிழ் அரசுக் கட்சியிலோ அல்லது அக்கட்சி தலைமை தாங்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலோ யாருமே இல்லையா? அல்லது அவர்களை சமநோக்கில் பார்க்கும் தரம் இல்லாத புழுக்களா?

இந்தக் கேள்விகளுக்கானப் பதிலைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுக்குழுவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கட்சிகளும் தமிழ் மக்களுக்குத் தெரியப் படுத்த வேண்டும். இவர்களுக்கு மானம், ரோசம், முதுகு எலும்பு இருந்தால், வேறு யாரும் கேட்காமலே சுமந்திரனின் பதவியைப் பறித்து, கட்சியிலிருந்து வெளியேற்ற வேண்டும்.

இதைச் செய்ய முடியாவிட்டால் தமிழ் அரசுக் கட்சியும், தமிழர் தேசியக் கூட்டமைப்பும் தாமாகவே அரசியலில் இருந்து விலகுவதாக அறிவித்து விட்டுக் கலைந்து போக வேண்டும்.



DORTMUND மாநகரத்திலே
தாயக மரக்கறிகள், பழ வகைகள் மற்றும்
உணவுப்பொருட்களை மொத்தமாக
பெற்றுக்கொள்ள நாடுங்கள்

StaR-Impex

வாடிக்கையாளர் மற்றும்
நண்பர்கள் அனைவருக்கும்
நத்தார், புதுவருடம்,
தைப் பொங்கல்
நல்வாழ்த்துகள்

Rabeena Since 1986 We've Mastered Taste
Aachi The Mother of Good Taste
BTM
Double Horse
Bringing Health to Life

பொருட்களை
ஜேர்மனியில்
மொத்தமாக
விநியோகம்
செய்யும்
ஒரே நிறுவனம்

Lebensmittel Grosshandel e.K.
Franziustr.150 (TOR 3) DE - 44147 Dortmund
Tel : 0231 / 8602696 Fax : 0231 / 8602698
email : info@star-impex.de
web : www.star-impex.net

TRS Asia's Finest Foods

MDH · Laziza International · Cock Brand · DAAWAT The Finest Basmati · Elephant House · Shan · Akash Basmati · Rubicon · Tilda Legendary Rice
Nestlé · PG tips · Niru · AROY-D · MTR · AASHIRVAAD · Pillsbury · Patak's Original · Laila

பகுதி.39



# உளவு பார்க்கும் நிறுவனங்கள்

இலங்கையின் ஏற்பட்ட அரசியல் நெகிழ்வு அத்தனைக்கும் இந்தியாதான் காரணம் என்பதை, இப்பொழுது இலங்கையில் ஏற்பட்டிருக்கும் அரசியல் சிக்கல்வரை பெரும்பாலான இலங்கையர்கள் நம்பத் தயாராக இல்லை. அதிலும் சிங்களவர்களைவிட, தமிழர்கள் இந்தியாதான் எமக்கு வழிகாட்டி என்ற மாயையை விட்டு விலகவே இல்லை.

இந்தியா மீதான இத்தகு அதீதமான பாசந்தான் இலங்கையைக் கையாள்வதற்கு இந்தியாவிற்குச் சுலபமான வழியைக் காட்டியிருக்கின்றது. ஒவ்வொரு நாடும் தனித்துவமானவை. அந்நாடுகளில் வாழும் கலை பண்பாடுகளாகட்டும், கலை வடிவங்களாகட்டும் இன்னொரு நாட்டின் பண்பாட்டுடனும், கலைகளுடனும் ஒப்பிடுகையில் வித்தியாசமானவை மட்டுமல்ல, பழக்கவழக்கங்களும் வித்தியாசமானவையாகவே இருக்கும்.

ஆனால், இந்தியா முழுவதும் மாநிலங்கள் ரீதியாக வாழும் மக்களின் பழக்க வழக்கங்களோ, கலை, பண்பாட்டு அடையாளங்களோ கணிசமான அளவு இலங்கை வாழ் மக்களான தமிழர்கள், சிங்களவர்களுடன் ஒத்தவையாக இருந்து வருகின்றன.

இந்தியாவின் தென் எல்லைகளான தமிழகத்திலிருந்து தமிழர்களும், மத்திய பிரதேசத்திலிருந்து சிங்களவர்களின் மூலவேர் பரம்பரையினரும் இலங்கையில் குடியேறியவர்கள் என்று வரலாற்று நூல்களும் சொல்லி வருகின்றன. இலங்கைத் தமிழர்கள், தமிழின வம்சாவழியினர் என்ற வரலாறும், அதே வேளை அவர்கள் திராவிட இனக் குழுமத்தைச் சேர்ந்தவர்கள் என்று இனக்குழும வரலாறும் உண்டு.

அதே போல இலங்கை வாழ் சிங்கள மக்கள் ஆரியவம்ச பரம்பரையைச் சேர்ந்தவர்கள் என்ற வலாற்றுக்கமைய அவர்கள் இந்திமொழி பேசும் மக்களோடு தொடர்புடையவர்கள் என்றும் வரலாற்று நூல்கள் சொல்கின்றன.

இன்றுவரை பெரும்பான்மையான இலங்கைத் தமிழர்களின் சமயமாக இருந்து வருகின்ற சைவ சமயமும், இலங்கை வாழ் பெரும்பான்மையான சிங்கள மக்களின் சமயமாக இருந்து வருகின்ற புத்த சமயமும், இந்தியாவிலிருந்துதான் இலங்கையில் பரவியது என்பதற்கமைய இன ரீதியாகவும், சமய ரீதியாகவும் இந்தியாவுடன் தவிர்க்க முடியாத, வலிந்துகூட அறுக்க முடியாத இறுக்கமான தொடர்பு இலங்கைக்கு இருந்து வருகின்றது.

இந்தியாதான் இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைக்குக் காரணகர்த்தா என்று, இலங்கைத் தமிழர்களில் பரவலாக அறிவு சீவிகள் ஊடகங்களில் கருத்துகளை வெளியிட்டு வந்த போதும், அதனை தமது பலமான வெளிப்பாடாகக் கொண்டு இலங்கை அரசியல் விவகாரங்களில் இந்தியாவின் தலையீடு உண்டு என்பதை இலங்கை அரசிற்குச் சொல்லி,

இலங்கையில் இன ஐக்கியத்தை ஏற்படுத்த முயற்சிக்கவேயில்லை.

இந்தியாதான் தமிழரின் இனப்பிரச்சினைக்குச் சரியான தீர்வைக் கொண்டுவரும் என்று இலங்கைத் தமிழ் அரசியல்வாதிகள் ஆண்டாண்டு காலமாக நம்பி ஏமாந்து வருகிறார்கள். எதற்கெடுத்தாலும் இந்திய அரசியல்வாதிகளிடம் தஞ்சமடைந்து கையேந்தி நிற்பதும், அவ்வரசியல்வாதிகள் தமிழ் அரசியல்வாதிகளாக இருப்பினும் அவர்களும் றோவின் உளவாளிகள் என்பதை நுட்பத் தன்மையுடன் சிந்தித்தல் வேண்டும். உளவாளிகளையும், ஒற்றர்களையும் தமது உளவு வேலைகளுக்கு பயன்படுத்துவதற்காக பெண், பொருள், பணம் என்பனவற்றைக் கொடுப்பது போல இந்தியாவின் றோ அமைப்பும் அவற்றையே பயன்படுத்துகின்றன.

மேற்கத்தைய நாடுகளில் உளவு வேலை பார்ப்பவர்களுக்கு ஒரு நாட்டின் இரகசியத்தின் முக்கியத்துவம் அறிந்து, பெண் சுகத்தை ஊதியமாகக் கொடுப்பது போல, ஆன்மீக பண்பாடுடைய இந்தியாவும் அந்த அணுகுமுறைக் கூடாகவும் இரகசியங்களை அறிந்து கொள்ளுமா? என்று வியப்படையத் தேவையில்லை.

இந்தியாவின் புகழ்பெற்ற நடிகைகளை இலங்கைக்கு எதிரான செயல்பாடுகளுக்கு காமக்கிழத்திகளாக பயன்படுத்தி வருகின்றமையை நிராகரிக்கவே முடியாது.

இந்தியாவிற்கு மிக அண்மையில் இலங்கை இருப்பதாலும், அது சிறு தீவாக இருப்பதாலும், அதுவும் இந்தியாவில் உள்ள மாநிலங்களின் பரப்பளவில் இருப்பதாலும் இந்தியா, இலங்கையை ஒரு அடிமை நாடாகவே பார்த்து வருகின்றது. இலங்கைத் தமிழ் அரசியல்வாதிகளில் வடக்கு - கிழக்கு அரசியல்வாதிகள் அடிக்கடி இந்திய அரசியல் நிர்வாகத்துடன் தொடர்புகளை ஏற்படுத்தி, அரசியல் தீர்வுக்குக் கையேந்தி நிற்கும் அவல நிலைக்கு உலகின் பலம்பொருந்திய உளவு நிறுவனங்களில் ஒன்றான இந்தியாவின் றோ தனது ஒற்றர்கள் மூலம் அவர்களை தமது வலையில் வீழ்த்தி கொண்டு வந்துள்ளது.

எட்டித் தொட்டால் கைக்கெட்டிய தூரத்தில் இலங்கைத் தீவு என்ற நிலையில், இந்தியா தனது உளவு வேலைகளை இலங்கையில் செய்வதற்கு இந்தியா மீதான தமிழினம் சார்ந்தும், தமிழ்மொழி சார்ந்தும், சைவம் சார்ந்தும், தமிழர்கள் வழிபாடுடைய நாடாக கருதிய நிலையிலும், ஆரிய வம்ச பரம்பரை சார்ந்தும், கௌதம புத்தர் பிறந்த



இடம், வாழ்ந்த இடம் என்று சிங்கள மக்கள் ஒரு அக்கறையுடன் இந்தியத் திசை நோக்கி பார்க்கும் நிலையில், அதுவே இலங்கை மக்களின் பலவீனமாகி விட்டது.

தமிழர்கள் தாம் இலங்கைவாழ் தேசிய இனம் என்பதற்கப்பால், தமது சனத்தொகை பற்றி சிந்திப்பதாகத் தெரியவில்லை. சனத்தொகைக் கூடிய இனமாக இருந்து வரும் சிங்கள மக்களின் பக்கமே இந்தியா இருந்த போதிலும், முந்தைய பகுதிகளில் குறிப்பிட்டது போல தமிழரைக் கையாள்வதற்கு சிங்களவர்களையும், சிங்களவர்களைக் கையாள்வதற்கு தமிழர்களையும் இந்திய அரசு, சனநாயக வழிமுறை அரசுகள் இலங்கையில் ஆட்சிக்கு வந்ததன் பின்னருங்கூட தனது உளவு நிறுவனமான றோ மூலம் இலங்கையைக் கையாண்டு வருகின்றது.

இலங்கைத் தலைநகரான கொழும்புவில் இயங்கி வந்த இந்தியத் தூதரகம் இலங்கை இந்திய வெளிநாட்டுக் கொள்கைக்கான செயல்பாட்டுக்காக மட்டுமே ஏற்படுத்தப்பட்டது அல்ல. எல்லா நாட்டுத் தூதரகங்கள் போல இந்தியத் தூதரகமும் ஒரு உளவு நிறுவனந்தான். யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இந்தியாவின் இலங்கைக்கான உதவித் தூதரகமும் ஒரு உளவு நிறுவனமே!.

இந்தியா மீதான இலங்கையர்களுக்கு உள்ள அபரிதமான வாஞ்சையே இலங்கை அரசின் அரசியல் பொருளாதாரக் கட்டமைப்பின் சீர்குலைவுக்குக் காரணமாகின்றது.

அமெரிக்கா மீதான ஆர்வ அலைக்கு காரணமாக இருப்பது அங்கிருந்து உலகம் முழுவதும் திரையிட்டு வரும் திரைப்படங்கள், அமெரிக்காவின் உணவகங்கள், பாலியல் படங்கள், பிரமிக்க வைக்கும் நவீன விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள், கோள்களை நோக்கிய நாசாவின் பயணங்கள், பிரபஞ்ச வெளியைத் தனது கைக்குள் கொண்டு வந்தமை, பலம் பொருந்திய முப்படைகள் என அமெரிக்காவை நோக்கி உலக நாடுகள் பார்ப்பது போலவே, இந்தியாவை நோக்கி இனமரபு பரம்பரை வழியாகவும், சமய ரீதியாகவும் இந்தியா நோக்கியப் பார்வை இலங்கை மக்களுக்குப் பிரமிப்பாகவே இருந்து வருகின்றது.

இந்தியா எமது என்ற ஒரு மனப்பான்மை இலங்கை மக்களிடம் இருக்கும் வரைக்கும் இலங்கை தன்னிலையில் உறுதியாக இருப்பது என்பது நடக்காத ஒன்றேயாகும்.

இலங்கையின் இன்றைய நிலைக்கு இந்தியாவின் றோதான் காரணம் என்றும், றோவிற்காக செயல்பட்டவர்கள் பற்றியும் குறிப்பிடுகையில் இனமரபு, சமய அடையாளம் தவிர்த்து, அங்கிருந்து வரும் திரைப்படங்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள், இலங்கை இந்தியாவுடனான மண் ரீதியாகவும், இலங்கை இந்தியாவுடனான பலவாயிரம் வருடங்களாக நிலவி வருகின்ற வரலாற்று தொடர்புகளும் தமிழர், சிங்களவர்களுக்கான வழிபாட்டுத் தளங்கள் போன்றவையும் இந்தியா இலங்கையைக் கையாள்வதற்குப் பலமாக இருந்து வருகின்றது.

ஒவ்வொரு நாடும் இன்னொரு நாட்டுடன் இருவித உறவுகளைப் பேணி வருகின்றன. பொதுநிலையில் நல்லுறவு, இன்னொன்று ஒரு நாட்டிற்குள் உளவு நிறுவனங்களை அனுப்பி, ஒற்றர்கள் மூலமாக கறுப்பு இராஜதந்திர உறவுகளைப் பேணி வருவது. மற்றைய எந்த நாட்டுக்குள்ளும் உளவு நிறுவன ஒற்றர்கள் நுழைவதை விட இலங்கைக்குள் இந்திய றோ அமைப்பின் ஒற்றர்கள் பல்வேறு வடிவங்களில் நுழைவது இலகுவானதே!.

**(தொடரும்)**



200+
பார்க்கிங் வசதியுடன்



நத்தார், புதுவருடம், தைப் பொங்கலை முன்னிட்டு மாபெரும் அதிரடி மலிவு விற்பனை

திகதி
18.12.2021
தொடக்கம்
15.01.2022
வரை

300sfr கொள்வனவு செய்பவர்களுக்கு 39.90sfr பெறுமதியான **Rice Cooker** இலவசம்
18.12.2021 தொடக்கம்
31.12.2020 வரையே!

**மொத்த விற்பனை நிலையம்**
Schwaresterstrasse 2, 5604 Hendschiken
Sales : 052 672 28 38 , Admin : 052 672 28 34, Fax : 052 672 28 39
info@subash.ch www.subash.ch

**IMPORTAS**
International Foods & Beverages
www.importas.ch
info@importas.ch

எமது புதிய கிளை EO Tychboden Parkweg 2
4665 Oftringen வெகுவிரைவில்...

Baslerstrasse 102
8048 Zürich
Tel : 043 343 03 55
Fax : 043 343 03 56

Kranichweg 8
3074 Muri bei Bern
Tel : 031 951 24 44

பகுதி-2

# மலையகத்திற்காக ஒருத்தி

ச.கஜாலினி



அவனது போதைப் பழக்கத்தையும் அதன் விளைவுகளையும் மறைமுகமாக கூறி முடித்தாள் அப்பெண்.

**சென்ற இதழின் தொடர்ச்சி**

ஷர்மிளா லயத்திற்கு வந்த முதல் நாளிலேயே அதிர்ச்சியான பல சம்பவங்களை முதன்முறையாக பார்த்து, அதிர்ச்சி அடைந்தவளாய் லயத்தை விட்டு வெளியேறினாள். பாதையில் நடந்து சென்று கொண்டிருக்கும் போது, பாடசாலையில் சக ஆசிரியராகவும், தனது நண்பனாகவும் இருந்த பாலா ஆசிரியரை வழியில் காண, தான் லயத்தில் பார்த்த விடயங்களைப் பற்றி கவலையுடன் அவரிடம் கூறினாள்.

"டீச்சர் நீங்க பார்த்தது ரொம்ப கொஞ்சம். இந்த ஸ்கூல்ல இருக்க முக்காவாசி பிள்ளைகள்ட நெலம இப்புடி தான். இதுதான் ஆரம்பம். போகப் போக நெறய பாப்பீங்க. நானும் ஒரு மலையகத்தானா, இந்தச் சமூகத்த எப்படி மாத்துறதுனு தான் தினம் தினம் யோசிச்சிட்டு இருக்கேன்" என மலையக மாணவர்களின் இன்றைய நிலையைக் கவலையுடன் எடுத்துக் கூறி விடைபெற்று சென்றார் பாலா ஆசிரியர்.

மறுநாள், வழமைபோல பாடசாலை செல்ல, அங்கே ஒரு மாணவன் அதிபர் அலுவலகத்திற்கு முன்னே தனது பயிற்சிக் கொப்பியைத் திறந்து தலையில் வைத்துக் கொண்டு, முழங்காலில் அமர்த்தப் பட்டிருந்தான். பெயர் கவிப்ரியன். அவன் அருகே சென்று காரணம் கேட்க தயங்கியவளாய் அவனைக் கடந்து செல்ல, அவனது திறந்து வைக்கப்பட்டிருந்த கொப்பியின் பக்கம் ஷர்மிளாவின் கண்கள் சென்றன.

அவள் விஞ்ஞான ஆசிரியர் என்பதாலோ தெரியவில்லை, அவனது கொப்பியில் கண்ணின் படம் வரைந்து, அதன் பாகங்கள் குறிக்கப்பட்டிருந்தது அவளது கண்களுக்கு பளிச்சென்று விளங்கியது. அந்தப் படத்தின் தெளிவும், அவனது முத்தான எழுத்துகளும் அவன் அருகே சென்று அவனை பாராட்ட ஷர்மிளாவை அழைத்தது. அவன் அருகே சென்று கொப்பியை எடுத்துப் பார்க்க அதிலே

**"கண்களில் இவை மட்டும்தான் இருக்கின்றன என சொன்னார் விஞ்ஞான ஆசிரியர்...**

**ஆனால், இல்லையடி பெண்ணே,**

**உன் கண்களில் வேறு ஏதோ ஒன்று இருக்குதடி**

**அது என்னைக் காந்தமாய் கவருதடி"**

என்ற கேளிக்கையான அறிவியல் பூர்வமான கவிதை எழுதப்பட்டிருந்தது. இதில் தவறு ஏதும் இருப்பதாக அவள் எண்ணவில்லை. மாறாக அவனது திறமையைக் கண்டு வியந்தாள். இருந்தும் கூட மூத்த ஆசிரியர்களின் தண்டனையை மறுக்க இயலாதவளாய் அமைதியுடன் விலகிச் சென்றாள்.

தோட்டப் பாடசாலை என்பதால் கட்டட வசதிகள் அவ்வளவாக இருக்க வில்லை. பிரதான மண்டபத்திலேயே நான்கு வகுப்புகளுக்கான இடம் ஒதுக்கப் பட்டிருந்தது. அங்கே எட்டாம் வகுப்பிற்கு பாடம் நடத்த ஷர்மிளா சென்றபோது, பத்தாம் வகுப்பில் லீலா என்ற ஆசிரியர் “பேருக்கேத்த ஆளுதான். பெரிய கவிஞர்னு நெனப்பு. உள்ள எல்லா கொப்பிலயும் காதல் கவிதை எழுதிக்கிட்டு... என்ன பழக்கம் இது? படிக்கிற வயசுல காதல், கவிதைன்னு.. இதுக்கு மேல இப்படி ஒரு விஷயத்த பார்த்தேன், உன்ன நான் சும்மா விட மாட்டேன். முதல்ல ஒழுங்கு மரியாதையா அத்தனை கொப்பியில இருந்தும், இந்தக் கவிதை கண்றாவி எல்லாம் கிழிச்சு வீசு” என அனைத்து மாணவர்கள் முன்னிலையிலும் கோபமாக கவிப்ரியனைத் திட்டிக் கொண்டிருந்தார்.

அவனும் தனது ஆயிரம் கனவுகள் அழிந்து போனது போல சோகமும், பயமும் கலந்தவனாய், தான் எழுதிய கவிதையைத் தானே கிழித்து எறிந்தான். அவ்வப்போது காகிதங்களில் கிறுக்களாய் கவிதை வரைந்து, அதனைப் பத்திரப்படுத்திக் கொள்ளும் பழக்கமுடைய ஷர்மிளாவிற்குக் கவிப்ரியனின் உளநிலை நன்றாகவே புரிந்தது. கற்ற ஆசிரியர்களின் அறியாமையை எண்ணி நொந்துக் கொண்டு “கவிப்பிரியன் போன்ற பல மாணவர்களின் திறமையை வளர்க்க ஏதாவது செய்யவேண்டும்” என மனதில் எண்ணிக் கொண்டாள்.

மாணவர்கள் பற்றிய ஆய்வை தினமும் நடத்தியவளாய், புதிய கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்தி, மாணவர்களின் கல்வி அறிவைக் கூட்ட முயற்சித்ததோடு, அதிபர் கண்களுக்கு ஒரு நம்பிக்கை நட்சத்திரமாகவும் விளங்கினாள் ஷர்மிளா டீச்சர். கற்பித்தலின் போது பிள்ளைகளின் உள நிலையை அறிந்து, அன்பாக நடாத்தினாள். பக்குவமாகப் பல புத்திமதிகளையும் கூறினாள். ஷர்மிளா டீச்சரின் அன்பில் மயங்கியவர்களாய் மாணவர்கள் நிலையிலும் சில மாற்றங்கள் ஏற்படவே செய்தன.

காலைக்கூட்டம், பாடம் ஆரம்பிக்கும் நேரம், பாடசாலையில் நடைபெறும் விழாக்கள் என தனக்குச் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம், அன்பாய் மாணவர்களுக்குப் புத்திமதிகளை எடுத்துரைக்க, மாணவர்களும் தன்னை மாற்றிக்கொண்டு கற்றலிலும், ஏனைய பல துறைகளிலும் தம்மை வளர்த்துக் கொள்ள ஆர்வம் காட்டினர்.

இவ்வாறு காலம் சென்று கொண்டிருந்தது. ஒரு நாள் காலை பாடசாலை செல்லும் போது அனைத்து



ஆசிரியர்களும் பரபரப்பாய் ஏதோ பேசிக் கொண்டிருக்க, வயதில் மூத்த ஆசிரியர் ஒருவரிடம் "என்ன டீச்சர் எல்லாரும் பரபரப்பா ஏதோ பேசிட்டு இருக்கீங்க. என்ன விஷயம்?" என்று கேட்க, "நம்ம ஸ்கூல்ல பதினோராம் வகுப்புல படிக்கிற புள்ள ஷீலா. நல்லா படிப்பா. ஒயல்ல நல்ல ரிசல்ட் எடுப்பானு எதிர்பார்த்த புள்ள. அவள்ட அம்மா ரெண்டு வருஷத்துக்கு முன்னாடி செத்துப் போயிட்டாங்க. அதுக்கு அப்புறம் அப்பாவும் இன்னொரு கல்யாணம் பண்ணிக்கிட்டு ஷீலாவ கவனிக்கிறதில்ல. இப்ப ரெண்டு மாசத்துக்கு முதல பாட்டி வீட்ல தனியா இருந்த ஷீலா, பக்கத்து வீட்டுக்கு வந்த ஒருத்தனால கற்பழிக்கப்பட்டு, இப்ப கர்ப்பமா இருக்காளாம்" என தான் கேட்ட செய்தியை ஒருவாறு சொல்லி முடித்தார் அந்த டீச்சர். செய்தி கேட்டுத் திகைத்து நின்றாள் ஷர்மிளா டீச்சர்.

இதுவரை காலமும் இந்தச் சமூகத்தில் நடந்த அத்தனை சீர்கேடுகளையும் கண்டு, அது தொடர்பாக ஒரு இளம் ஆசிரியராக எந்த நடவடிக்கையும் எடுக்காதிருந்தாலும், இப்போது நடந்த சம்பவம் ஷர்மிளா டீச்சருக்கு வாழ்வில் எதிர்பாராத ஒரு சம்பவமாக இருந்தது. "இனி ஒரு நொடியும் தாமதிக்காது, இந்தச் சமுதாயத்தை மாற்றி அமைக்க வேண்டும்" என எண்ணினார். இதுவே கற்ற கல்வியின் பலன் எனவும் எண்ணினார்.

இது தொடர்பாக ஸ்டாப் மீட்டிங்கில், ஏனைய ஆசிரியர்களோடு கலந்துரையாடிய போது, "ஏன் வீண் பிரச்சினைய விலைக்கு வாங்கனும்" எனக் கூறி சிலர் ஒதுங்கிக் கொண்டனர். "இவ்வளவு நாள் திருந்தாததுக இனிதான் திருந்த போகுதுகளா" என சிலர் உரத்துக் கூறினர். இருந்தாலும் அதிபர், உதவி அதிபர் மற்றும் இன்னும் சில ஆசிரியர்கள் ஷர்மிளாவின் கருத்துக்கு ஆதரவளித்தனர்.

அதன்படி சீர்திருத்தத்தை முதலில் பாடசாலை மாணவர்களிடம் ஆரம்பிக்க எண்ணி, மாணவர்களுக்கு அவர்களது வயது, பாலினம் என்பவற்றிற்கு ஏற்றார்போல் வாரத்துக்கு ஒருமுறை என்றவாறு அவர்களது நடத்தை, ஒழுக்கம், வாழ்வியல் பிரச்சினைகளை வெற்றிக் கொள்ளும் விதம் போன்ற விடயங்கள் தொடர்பாகவும், வயது வந்த பிள்ளைகளுக்கு எதிர்ப்பாளர்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் தொடர்பாகவும் விழிப்புணர்வு வழங்க ஏற்பாடுகளை செய்தாள். கல்வியில் பின்தங்கியிருந்த மாணவர்களை முன்னேற்றமடையச் செய்ய, அவர்களுக்கு ஏற்ற கற்றல், கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்தி கற்றலில் ஈடுபடச் செய்தாள்.

அடுத்த இதழில் தொடரும்...





top up
prices
My L-mobile
International
l-mobi mobile
100MB 50MB + 50MB Gratis €1
256MB 128MB + 128MB Gratis €2
512MB 256MB + 256MB Gratis €3
1GB 512MB + 512MB Gratis €4
2GB 1GB + 1GB Gratis €5
3GB 1.5GB + 1.5GB Gratis €6
4GB 2GB + 2GB Gratis €6,50
5GB 2.5GB + 2.5GB Gratis €7
6GB 3GB + 3GB Gratis €7,50
7GB 3.5GB + 3.5GB Gratis €8
8GB 4GB + 4GB Gratis €8,50
10GB 5GB + 5GB Gratis €9
12GB 6GB + 6GB Gratis €11
15GB 7.5GB + 7.5GB Gratis €13
Maandelijks opzegbaar
Geen aansluitkosten
Geen BKR controle
gratis simkaart
maand bundel
jaar bundel
Action! get 2= pay 1
With an annual bundle
worth 24.95
Get the 2nd SIM card for
FREE!
A whole year for a fixed price!
Reliable, affordable,
accessible.
For everyone.
+31 20 363 62 31
cs@l-mobi.nl
Website : www.l-mobimobile.nl
Amstel Business Park Entrada 204,
1114 AA Amsterdam
Available at
JUMBO
coop
AKO
recharge.com
SENIORSTORE.NL
bp
OPWAARDEREN.NL
BELTEGOED.NL
Phone House
Primera
telecombinatie
BCC
OPTIE 1 Smart Living
SPAR
MCD mijn supermarkt



கண்ணன், யாழ்

# ஈழமக்களின் உணர்வுகளில் தீயை வைக்கலாமா?

## மாவீரர் நாளின் எதிரொலிகள் ...

நவம்பர் 27 ஈழத்தமிழ் மக்களுக்கு ஒரு புனிதமான நாளாக 1989 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டது. ஈழத்தில் விடுதலைக்காக உயிர் நீத்த வீரர்களை நினைவுகூரும் நாள் போன்று, மற்ற நாடுகளில் போர்வீரர்களை நினைவு கூரும் நாட்களோடு மாவீரர் நாள் ஒப்பிடத்தக்கது. தூயப் போரியல் ஒழுக்கங்களுடன் போராடி, தமிழ் மக்களுக்காக தங்கள் இன்னுயிர்களை அவர்கள் ஈந்தார்கள்.

2009 ஆம் ஆண்டு யுத்த முடிவுக்கு பின்னர், ஈழத்தமிழர்கள் தமக்காக உயிர் நீத்த மாவீரர்களை நினைவு கூற, இலங்கை அரசால் ஒருபோதும் அனுமதிக்கப் படவில்லை. அவர்களின் உணர்வுகளுக்கு ஒரு சிறு துளியேனும் முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. பயங்கரவாதிகளை நினைவு கூறுதல் என்ற பார்வைக்குள் இந்த நிகழ்வை உள்ளடக்கி ஆக்கிரமிப்பும், அடக்குமுறையும் தமிழர்கள் செறிந்து வாழும் பகுதிகளில் கட்டவிழ்த்து விடப்பட்டு இருப்பது மிருகத்தனமான செயலாகவே உள்ளது.

ஆனாலும், உணர்வுகளை அழிக்க முடியாது என்பது உண்மையிலும் உண்மையானது. 2009ஆம் ஆண்டு தொடக்கம், இந்த நிகழ்வை ஈழத்திலும் எழுச்சியுடன் கொண்டாட வேண்டும் என பலவகை முயற்சிகள் எடுத்தாலும், அது முயல்கொம்பாகவே இருக்கிறது. மாவீரர் நாளுக்கு முன்னரான கைதுகள், கெடுபிடிகள், நீதிமன்றத் தடை உத்தரவுகள், ஊடகவியலாளர்களுக்கான அடக்குமுறைகள் என்பன இன்னமும் இறுக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றதே தவிர, தளர்ந்து போனதாக இல்லை.

வன்னிப்பகுதியில் அதிகரிக்கும் அடக்குமுறைகள் மெல்ல மெல்ல யாழ்ப்பாணம் கிழக்கு என பரிணமித்து, ஒருமித்த இறுக்கமாக வந்து, இவ்வருடம் மிக நெருக்கடியை விளைவித்தனர் .

வடக்கின் அனைத்து வணக்கஸ்தலங்கள், பொது இடங்கள், பல்கலைக்கழகம், வீதிகள் என அனைத்து இடங்களிலும் ஆயுதம் தாங்கிய போலீசாரும், இராணுவமும் நவம்பர் 27 அன்று



காவல் கடமையில் இருக்கும் அளவுக்கு நிலைமை மோசமாகவே இருக்கிறது.

தமிழர்களுக்கான சுய நிர்ணய உரிமை என்பதற்கும் அப்பால், அவர்கள் தமது இறந்த பிள்ளைகளை நினைவு கூறவே உரிமை அற்றவர்களாக இருப்பது மிக துர்பாக்கியமான நிலைமை. தப்பி தவறியும் கைகளில் எரியும் தீபம் இருக்க கூடாது என்பதில், இராணுவத்தை வைத்தே இலங்கை அரசு தமிழரின் கழுத்தை நெரிப்பதை உலக சமூகமும் பார்த்துக்கொண்டு இருப்பது துயரமானது.

நவம்பர் மாதம் தொடங்கிய முதல் நாளிலேயே உணர்வுள்ள தமிழர்கள் என்ற வட்டத்துக்குள் இருக்கும் அரசியல்வாதிகள், சமூக சேவகர்கள், பொதுச் சேவையாளர்கள் அனைவருக்கும் பொலிஸாரால் நீதிமன்ற கட்டளைகள் வழங்கப்பட்டு, கைகள் கடத்தப்பட்டன.

எந்த ஒரு நாட்டிலும் போருக்குப் பின்னர் இறந்தவர்களை நினைவு கூறுதல் என்பது தடுக்கப்படாத ஒரு விடயம். ஆனாலும், சட்டத்தில் ஒன்றை வைத்துக்கொண்டு, நடைமுறையில் ஒன்றைக்காட்டும் இலங்கை அரசு, தமிழ் மக்களை ஒடுக்கவே பார்க்கின்றமை ஒன்றும் மறுப்பதற்கில்லை.

2021ஆம் ஆண்டுக்கான மாவீரர் நாளுக்கும், இலங்கையின் தமிழ் மக்கள் தம்மை ஆயத்தம் செய்தனர். 'அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்' என இலங்கை அரசு அடக்குமுறையினையும் தமிழ் மக்கள் நினைவு கூறுதலையும் கைவிடவில்லை.

நாட்டின் வடக்கு கிழக்கு பகுதிகளில் ஒரு வாரத்துக்கு முன்னரே இலங்கை போலீசாரும், இராணுவமும் மாவீரர் நாள் நிகழ்வுகளை நிறுத்த திட்டமிட்டு நியமிக்கப்பட்டதும், மக்களும் தம்மைச் சுதாகரித்து கொண்டனர் என்றே சொல்ல வேண்டும்.

'எமக்கான உரிமை வேண்டும்' என்பதை அவர்கள் உணர்ந்தார்கள் போல, தம் கடமைகளைச் செய்ய பொலிஸாருடனும், இராணுவத்தினருடனும் மல்லுக்கட்ட தயாராகினர். அதன் விளைவு பல அடக்கு முறைகள், கைதுகள், எச்சரிக்கைகள்,வழக்குகள் என்பனவற்றுக்கு இடையில் மாவீரர்களுக்கு நினைவேந்தல் செய்தமைதான்.

ஒரு இனம் தனக்கான அத்தனை சுதந்திரங்களை இழக்கும்போது, அதற்காக உயிர் நீத்தவர்களே கண்முன் வந்து நிற்பார்கள். அவர்களின் நினைவுகளுடன் அழுது குமுறுதல் ஆறுதலைதரும் விடயம் என்கின்றனர் உண்மையில் பாதிக்கப் பட்டவர்கள்.

மாவீரர்களுக்கான நாளை ஒரு கோலாகலமானக் கொண்டாட்டமாக புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழ்பவர்கள் கொண்டாடுவதைக்கூட, தாயகத்தில் இருப்பவர்கள் வெறுக்கின்றனர் என்பதை நாம் சொல்ல கடமைப் பட்டுள்ளோம். உணர்வுடன் கூடிய கண்ணீரில் எரிகின்ற நெருப்பாகவே



அவர்களின் நினைவுகள் இருத்தல், தற்போதைய தேவை என்பதை எல்லோரும் உணரவேண்டும்.

புலத்தவர்களின் செயற்பாடுகளை மையமாக்கி, ஈழத்தில் இருப்பவர்கள் பாதிக்கப்படக் கூடாது என்பதிலும், அனைவரும் கவனம் செலுத்த வேண்டிய கடப்பாடு இருப்பதை மறுக்க முடியாது.

இம்முறை பலவகை அடக்கு முறைகள், அடி-உதைகள், வசை பாடல்கள், தமிழனின் உரிமையை கேள்வி கேட்கும் இடர்பாடுகளோடு மாவீரர் நாளை நினைவு கூர்ந்து இருக்கிறார்கள் தாயகத்து மக்கள்.

தாயக மண்ணில் இருக்கும் மாவீரர் குடும்பங்களின் உண்மையான உணர்வை, எதிரி அடக்க நினைப்பது எதிரி பக்க நியாயமாக இருந்தாலும், உணர்வு ரீதியாக அவர்கள் அடையும் சொல்லொணா துயர் வலி மிகுந்தது. வீட்டுக்கொரு வீரரை விதைத்து விட்டு, வருடத்தில் ஒருநாள் நினைவு கூற நிர்கதியற்று நிற்கும் மக்கள் பெரும் வருத்தத்துக் குரியவர்களே!.



# இருந்தும், செத்தும் ஈழத் தமிழனை அழித்த ராஜீவ் காந்தி!

**40 வருடங்களாகியும் தீராத வன்மம் ஏன்?**

**தமிழீழ விடுதலைப் புலிகள் மீது சுமத்தப்படும் அகில உலகத் தடை எதற்காக?**

இந்தக் கேள்விகளுக்கு எல்லாம் பதில் தரும் விதமாக 1981இல் புதிய ஜனநாயகம் - ஜூன் 1991 இதழில் வெளியான கட்டுரையை ‘வினவு’ இணைய தளம் வெளியிட்டுள்ளது.

அந்தக் கட்டுரை ஈழத் தமிழ் மக்களின் தலை எழுத்தையே மாற்றி, மீள முடியாத அடிமை அவமான அவல வாழ்வுக்குள் தள்ளப்பட்ட அரசியல் பற்றியக் காரணிகளை விலாவாரியாக விவரிக்கிறது.

இது நாள்வரை எமது அரசியல் விமர்சகர்களால் இக்கட்டுரை கவனத்தில் கொள்ளப் பட்டதாகத் தெரியவில்லை. ராஜீவ் கொலை ஏற்படுத்திய பரபரப்பான அரசியல் மாற்றங்களும், அவை இந்தியாவில் ஏற்பட்டதாலும் இந்த அளவுக்கு எமக்கு முக்கியமான அரசியல் விமர்சனம் கவனிக்கப் படாமலே போய் விட்டது.

அந்தக் குறையை இந்த அகரம் இதழ் நீக்கும் என நம்புகிறோம் -ஆசிரியர்.

**ராஜீவ் கொலை : பழிக்குப் பழிதான்!**

ராஜீவ் செய்த கிரிமினல் குற்றங்கள், படுகொலைகள், பாசிச அடக்குமுறைகள், நாட்டையே சுரண்டிச் சூறையாடியது ஆகியவை எண்ணிலடங்கா. இவை சாதாரண குற்றங்களல்ல; மறக்கக் கூடியவையோ, மன்னிக்கப்படக் கூடியவையோ அல்ல.

அடையாளம் தெரியாத அளவிற்கு துண்டு துண்டாகப் பிய்த்தெறியப் பட்டு, ராஜீவ்காந்தி அழித்தொழிக்கப் பட்டு விட்டார். அவரது எலும்புகளையும், சதைகளையும் மூவர்ணக் கொடியில் மூட்டை கட்டி அள்ளிப் போட்டுத்தான் சடலம் எடுத்துச் செல்லப்பட்டது. நாட்டையே சூறையாடிய ஒரு ஊதாரியும், பீரங்கித் திருடனும், ஏகாதிபத்திய அடிவருடியும், கொலைகார பாசிஸ்டுமான ஒரு நபர் இப்படி சாகடிக்கப் படுவது பொருத்தமானது தான். அதைக் கண்டிப்பதோ, அதற்காக அனுதாபப்படுவதோ அவசியமில்லை.

அதேவேளையில், ஒரு தனிநபரைக் கொன்று விடுவதன் மூலம் அவர் சார்ந்த அமைப்பையோ, அதன் வர்க்கத் தன்மையையோ மாற்றிவிட முடியாது; அவ்வமைப்பை அம்பலப்படுத்தி, பரந்துபட்ட மக்களை அரசியல் படையாகத் திரட்டி மட்டுமே ஒழிக்க முடியும் என்பதே வரலாற்று அனுபவமாகும்.

ராஜீவ் நாட்டுக்காக தன்னை அர்ப்பணித்தவர்; அவரது பரம்பரையே தியாகப் பரம்பரை சர்வதேச அரங்கில் இந்தியாவின் மதிப்பை உயர்த்தியவர்; அவரது இழப்பு ஈடு செய்ய முடியாது என்றெல்லாம் அரசின் ஊதுகுழல்களான வானொலி, வானொளி முதல் அனைத்து வோட்டுக் கட்சிகளும் தரகு முதலாளித்துவ, பார்ப்பன-பனியா பத்திரிகைகளும் ராஜீவைப் புகழ்ந்து தள்ளிக் கொண்டிருக்கின்றன.

இறுதி ஊர்வலம், அஸ்தி கலச ஊர்வலம் ஆகியவை பிரமாதமாக விளம்பரம் செய்யப் படுகின்றன. இவைகளின் மூலம் நாட்டுக்காகவும், மக்களுக்காகவும் பாடுபட்ட மாபெரும் தலைவர் ஒருவர் மறைந்து விட்டதைப் போன்ற பிரமை ஊட்டப்பட்டு வருகின்றது.

விமான ஓட்டியாக இருந்த ராஜீவ்காந்தி அரசியலுக்கு கொண்டு வரப்பட்டதே பரம்பரை சர்வாதிகார ஆட்சியை நீட்டிக்கத்தான்; அவர் பிரதமர் ஆனதும் தாயின் பிணத்தைக் காட்டித்தான்; ஏழாண்டு கால அவரது அரசியல் வாழ்க்கை ராஜீவை மாபெரும் தேசியத் தலைவராகக் காட்டுகிறதா? இல்லவே இல்லை; மாறாக ராஜீவை பின்வருமாறே காட்டுகின்றன.

- ஒரு பாசிஸ்ட் கொடுங்கோலரே ராஜீவ். 1975 இல் அவசர நிலை பாசிசத்தை நியாயப்படுத்தி பேசியதோடு, தேவைப் பட்டால் அப்படி ஒரு ஆட்சியைக் கொண்டு வருவேன் என்று பகிரங்கமாக அறிவித்தவர்; தன்னைச் சுற்றி ஒரு பாசிச கும்பலை உருவாக்கி, மக்களை அடக்கி ஒடுக்க பல கருப்புச் சட்டங்களைக் கொண்டு வந்தவர்; தனது ஆட்சியை நிரந்தரமாக்கிக் கொள்ள பாசிச ஆட்சியைக் கொண்டு வரவும் தயாராக இருந்தவர்; அதற்கான தயாரிப்புகளைச் செய்தவர்.

- பாசிச இந்திராவின் கொலையைத் தொடர்ந்து டெல்லியிலும், வட இந்தியத் தலைநகரங்களிலும் 5,000-க்கும் மேற்பட்ட அப்பாவி சீக்கியர்களைக் கொன்று ஆட்சிக்கு வந்தவர். அக்கொலைக் குற்றவாளிகளுக்கு அமைச்சர் பதவிகள் அளித்து பாராட்டியவர்.




பெற்ற தாயின் முன்னே மகனை உயிரோடு கொளுத்தியது; மனைவி முன்னே கணவனை வெட்டிக் கொன்றது, கற்பழித்தது போன்ற கொடுமைகளை செய்யத் தூண்டிப் பேசியவர்; 'ஒரு பெரிய மரம் விழும் போது, சில இழப்புகள் ஏற்படுவது இயல்பே' என்று அதை நியாயப்படுத்தியக் கிரிமினல் குற்றவாளிதான் ராஜீவ். பழிவாங்கும் வெறியோடு இந்திரா கொலைக்கு அறவே தொடர்பில்லாத நிரபராதி கேஹார்சிங்கை தூக்கிலிட்டு, சிம்ரஞ்சித்சிங் மான், அதீந்தர் பால்சிங் ஆகியோர் மீது சதிக்குற்றம் சாட்டி, வழக்கே இல்லாமல் தனிமைக் கொட்டடியில் அடைத்துச் சித்திரவதை செய்த அரக்கர்தான் ராஜீவ்.

- ஒரு இலட்சம் மக்களை நிரந்தர நோயாளிகளாக்கி 10,000 பேரைக் காவு கொண்ட போபால் விஷவாயு 'விபத்து'க்கு காரணமான யூனியன் கார்பைடு நிறுவனத்துடன் இரகசிய பேரங்கள் நடத்தி, குற்றவாளிகளைத் தப்புவிக்கச் செய்த மக்கள் விரோதிதான் ராஜீவ்காந்தி; நட்ட ஈடு கேட்டுப் போராடிய மக்களை அடக்கி ஒடுக்கியவர்தான் ராஜீவ்.

- சீக்கிய சமுதாயத்தையே பழிவாங்கும் வெறியோடு பஞ்சாபில் அரச பயங்கரவாதத்தை ஏவிவிட்டு, உளவுப்படை "ரா" மூலம் பல சதிகளையும், கொலைகளையும் அரங்கேற்றி பழியை சீக்கிய தீவிரவாதிகள் மீது சுமத்தி, பஞ்சாபையே இரத்தக்களறியாக்கிய ராட்சசன்தான் ராஜீவ்காந்தி. பஞ்சாபிலும், காஷ்மீரிலும் கிரிமினல் கேடிகளையும், போலீஸ் ரவுடிகளையும் கொண்ட இரகசிய கொலைப் படைகளை உருவாக்கி, மாதத்திற்கு இவ்வளவு பேரைக் கொல்ல வேண்டும் என்று இலக்கு வைத்து ஆயிரக்கணக்கான இளைஞர்களைக் கொன்றொழித்த கொடுங்கோலரே ராஜீவ்காந்தி. திரிபுரா இனவெறி தீவிரவாதிகளுடன் கள்ளக் கூட்டு சேர்ந்தும் அசாம், போடாலாந்து கிளர்ச்சியைச் சீர்குலைத்தும் உளவுப்படை "ரா" மூலம் சதிகளையும் இனப்படுகொலைகளையும் தனது குறுகிய அரசியல் ஆதரவுக்காகக் கட்டவிழ்த்து விட்டார் ராஜீவ்.

- தனது பதவியைப் பாதுகாத்துக் கொள்ள இந்து - முஸ்லீம் மதவெறியர்களுடன் கள்ளக் கூட்டுச் சேர்ந்து, மதவெறியைக் கிளறி விட்டு ஆயிரக்கணக்கான அப்பாவி மக்களைப் பலியிட்டார். இதேபோல குஜராத்திலும், ஆந்திராவிலும் இடஒதுக்கீடு சாதிக் கலவரங்களைத் திட்டமிட்டே தூண்டினார்.

அடுத்த இதழில் தொடரும்...



17 YEARS

Radio - by - Phone

ETR

ஐரோப்பிய தமிழ் வானொலி

அன்பார்ந்த
நேயர்கள் மற்றும்
விளம்பரதார பெருமக்கள்
அனைவருக்கும்
நத்தார், புதுவருடம்,
தைப் பொங்கல்
நல் வாழ்த்துகள்

00 4934 5483411998

தொலைபேசி இலக்கத்தில்

ஐரோப்பியத் தமிழ் வானொலி



நேரடி நிகழ்ச்சிகளில் பங்குபெற
அழையுங்கள்
00 49 231 700 977 60

அழையுங்கள்! வானொலியைக்
கேட்டு மகிழுங்கள்..!!

மேலதிக விபரங்களுக்கு... www.etr.fm



தேவன்

# ஒமிக்ரோன்

## தாங்குமா உலகம்?

ஏற்கனவே இருந்த வகைகளை விட அதிவேகமாக பரவக்கூடியதும் மற்றும் தடுப்பூசிகளுக்கே கட்டுப்படாமல் மிகவும் கொடியதாக இருக்கக் கூடியதுமான 'ஒமிக்ரோன்' ***(Omicron)*** எனப் பெயரிடப்பட்ட கோவிட்-*19* இன் புதிய வகை நோய்த்தொற்றுக் குறித்து உலக சுகாதார அமைப்பு (கீபிளி) கடந்த *26.11.2021* அன்று எச்சரித்தது.


***Covid - 19*** இன் இந்த புதிய வகை உருவாகியிருப்பது குறித்து வளர்ச்சியடைந்த நாடுகள் பெரிதாக அலட்டிக் கொள்வதாக இல்லை. காரணம் பொருளாதார வளர்ச்சி பாதிக்கப்படக் கூடாது என்பதே!. ***Covid-19*** ஐ முற்றிலும் ஒழிக்கா விட்டால், எப்போதும் வேண்டுமானாலும் புதிய மற்றும் ஆபத்தான நோய்த்தொற்று உருவாகலாம் என முன்னணி விஞ்ஞானிகளும் பலமுறை எச்சரித்துள்ளனர்.

இந்த நோய்த்தொற்று பரவி வரும் நிலையில், அது மனிதகுலம் முழுவதையும் அச்சுறுத்தும் வகையில் பரவக்கூடிய, ஆபத்தான, தடுப்பூசிக்கே கட்டுப்படாத, புதிய வகைகளாகத் தொடர்ந்து உருமாறக் கூடும். உலகளவில் அது ஒழிக்கப்படா விட்டால், ***Covid-19*** இன் நெருப்புத் தழல்கள் தொடர்ந்து எரிந்து, இத்தொற்று புதிதாக உருவாவதற்கான நிலைமைகளை உருவாக்கும். மேற்கூறிய எச்சரிக்கைகள் பெரும் கேடான விளைவுகளோடு நிரூபணமாகி உள்ளன.

இதுவரை கண்டறியப்பட்டதிலேயே மிகவும் பலத்துடன் தற்போது உருமாறி இருக்கும் இந்த ***Omicron*** வகை, முன்பில்லாத வேகத்தில் தென்னாபிரிக்கா எங்கிலும் பரவலாகப் பரவி உள்ளன.

கடந்த *26.11.2021* அன்று நோய்கட்டுப்பாடு மற்றும் தடுப்புக்கான ஐரோப்பிய மையம் தனது அறிக்கையில், "ஐரோப்பா முழுவதும் மீண்டும் நோய்த்தொற்று எழுச்சி பெற்றுள்ள சூழ்நிலையில் ***Omicron*** வந்திருப்பதானது அதிக வேகத்துடன் பரவக்கூடிய சாத்தியக்கூறுகளை உருவாக்கும்" என எச்சரித்தது. "ஐரோப்பிய ஒன்றியம் / ஐரோப்பிய பொருளாதார மண்டலத்திற்கான ஒட்டுமொத்த அபாய மட்டம்... அதிகம் என்பதிலிருந்து மதிப்பிடப் படுகிறது" என்று தனது அறிக்கையை வெளியிட்டிருக்கிறது.

இந்த புதிய வகை நோய்தொற்று மனிதர்களுக்கு ஏற்படுவதற்கான அதிக வாய்ப்பினைக் கொண்டுள்ளதாகவும், கிட்டத்தட்ட தென்னாபிரிக்காவின் எல்லா மாகாணங்களிலும் அது அதிகரித்து வருவதாகவும் உலக சுகாதார அமைப்பு குறிப்பிட்டது. இந்த வகை நோய்த்தொற்று ஏற்படுத்துவதில், முந்தைய அதிகரிப்புகளை விட வேகமான விகிதத்தில் இருப்பது கண்டறியப் பட்டுள்ளதுடன், இது வளரக்கூடிய வேகம் முன்னையதைவிட அதிகம் எனக் குறிப்பிடுகிறது.



அன்னமித்த இரண்டு தசாப்தங்களாக பெருந்தொற்றைக் குறித்து ஆய்வு செய்து வரும் இயற்பியலாளர் டாக்டர் யானீர் பர்-யாம், “புதிய வகை = புதிய பெருந்தொற்று” என்று எழுதினார். “இன்று நமக்குத் தெரிய வரும் நோய்தொற்றுகள் ஒரு சில நாட்களுக்கு முன்னரோ அல்லது இரண்டு வாரங்களுக்கு முன்னரோ ஏற்பட்டவை. இன்று ஏற்படும் நோய்தொற்றுகள் ஒரு சில நாட்களுக்குப் பின்னரோ அல்லது இப்போதிருந்து இரண்டு வாரங்களுக்குப் பின்னரோ மட்டுமே தெரிய வரும்.” உண்மையான நோய்த்திரிபை விட இந்தப் புதிய வகை ஆறு மடங்கு அதிகமாக நோய்தொற்று ஏற்படுத்தக்கூடியது என்பதோடு, எட்டு மடங்கு அதிகமாகக் கொடியது என்றவர் கணக்கிட்டுள்ளார்.

இந்நோய் பரவிவரும் வேகத்தைப் பார்க்கையில், அது இப்போதே உலகெங்கிலுமான நாடுகளில் இருக்கும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை என்று விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர். ‘உலகெங்கும் இந்நோய்ப் பரவல் இருக்கலாம்’ என்று கூறிய நுண்கிருமியியல் நிபுணர் அங்கேலா ராசுமுசென், ‘பல இடங்களில் இது கட்டுப்படுத்த முடியாத அளவைக் காட்டுகிறது’ என்றார்.

இந்த ***Omicron*** வகையின் எழுச்சியானது கோவிட்-19 இன் இன்னொரு வகை பேரழிவுக்கரமாக எழுச்சி பெற்றிருப்பது உறுதிசெய்யப்படுகிறது. உலகெங்கிலும், நோயாளிகளின் எண்ணிக்கை ஓர் மாதத்திற்குள் 40 சதவீதம் அதிகரித்துள்ளது. யேர்மனியில் தினமும் மாறிக் கொண்டே இருக்கும் சராசரி நோயாளிகளின்




எண்ணிக்கை *55,000* ஐ எட்டியுள்ளது, இது முன்னெப்போதும் பதிவு செய்யப்படாத அளவுக்கு அதிகபட்ச மட்டத்தை விட, இரண்டு மடங்கு அதிகமாகும்.

அமெரிக்காவில், ஒவ்வொரு நாளும் *1,000* க்கும் அதிகமானவர்கள் இறந்து கொண்டிருக்கிறார்கள், மிச்சிகன், மினசோட்டா மற்றும் பிற மாநிலங்களில் தடுப்பூசிகள் இருந்தாலும் கூட, முன்பில்லாதளவில் புதிய நோயாளிகளின் வருகை அதிகரித்துள்ளது.

கடந்த வாரம் வெளியிடப்பட்ட அமெரிக்க சனாதிபதி பைடென் அறிக்கையின்படி, 'தென் ஆபிரிக்காவுக்கானப் பயணக் கட்டுப்பாடுகளைத் தவிர, இந்தப் புதிய வகை நோய்த்தொற்றிற்கு விடையிறுப்பாக வேறெந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை' என்று அறிவித்தார். "விஞ்ஞானிகள் மற்றும் எனது மருத்துவக் குழு என்ன ஆலோசனை வழங்குகிறார்களோ, நாங்கள் அதன் வழியே தொடர்வோம்," என்றவர் அறிவித்தார்.

இது ஓர் முழுப்பொய் எனப்படுகிறது. பைடென் விஞ்ஞானிகளின் ஆலோசனைப் படி நடக்கவில்லை -அவரின் கொள்கைகள் பெருந்தொற்றின் மீளெழுச்சிக்கு இட்டுச் செல்லும் என்பதை அவர்கள் எச்சரித்துள்ளனர்- மாறாக, அவர் ***Wall Street*** நிறுவனத்தின் ஆலோசனைப்படி நடக்கிறார் என்றும் குற்றம் சாட்டப்படுகிறது,

அவருக்கு முன்பிருந்த ட்ரம்பின் உள்நாட்டுக் கொள்கையைப் போலவே, பாடசாலைகளை மீண்டும் திறப்பதே பைடெனின் மிக முக்கிய உள்நாட்டு கொள்கையாக உள்ளது, மிச்சிகனின் நோய்த் தொற்றுப் புள்ளி விபரங்கள்படி இதுவே நோய்த் தொற்றுக்கான மிக முக்கிய ஆதாரமாக உள்ளது. மக்கள் முகக்கவசங்கள் அணிய வேண்டியதில்லை என்று இந்த கோடையில் வலியுறுத்திய பைடென் நிர்வாகம், குழந்தைகளுக்கு ***Covid-19*** ஏற்படாது என்றும் அவர்கள் மூலமாக நோய் பரவாது என்றும் பரப்பிய பொய் இப்பொழுது அடிபட்டுப் போயிருக்கிறது.

பைடெனுக்கும், பிற மட்டுப்படுத்தப் பட்ட தணிப்பு நடவடிக்கைகளை ஆதரிப்பவர்களுக்கும் என்ன கருத்துவேறுபாடுகள் இருந்தாலும், பெருநிறுவனங்களின் நிதிச் செல்வ வளத்தில் கை வைக்கும் எந்தவொரு நடவடிக்கைகளையும் ஆதரவளிக்க முடியாது என்ற கருத்தில் அனைவரும் உடன்படுகின்றனர். இந்த பெருந்தொற்றைத் தடுப்பூசி மூலமாக நிறுத்தி விட முடியும் என்ற அவர்களின் விஞ்ஞானப் பூர்வமற்ற வாதத்தை, இனிவரப்போகும் ***Omicron*** வகையின் தொற்று அடித்து நொறுக்கும். ஏனெனில், எவ்வளவு மக்கள் நோய்த்தொற்றினால் இறந்தாலும், ஊரடங்கு நிலையை அறிவிப்பதில்லை என்பதே பெருவளர்ச்சி பெற்ற நாடுகளின் அறிவிக்கப்படாத முடிவாகும்.

**மூலம் : Biologist Trevor Bedford அவர்களது கட்டுரை**




V BOX
MEGA Sale
€149
€109
12:00
பொங்கலை முன்னிட்டு
V BOX வாங்கும் அனைவருக்கும்
பொங்கல் பானை செட் இலவசம்
பொங்கல் செய்ய
தேவையான 16
பொருட்கள்
அடங்கிய
பொங்கல் பானை
செட் இலவசம்
Contact : 0151 4697 8484

வி. சபேசன்

**தொடர்ச்சியாக ஒடுக்கப்பட்ட மக்களின் குரல்களைப் பதிவு செய்கின்ற படங்கள் வெளிவருவதை இந்தச் சக்திகள் விரும்பவில்லை.**




# அறிவுக்கு உட்படாத புராணக் கதைகளால் நவீன காலத்திலும் வருத்தத்தை தருகிறது.

ஜெய்பீம் படம் வந்தவுடன் அகரத்தில் ஒரு கட்டுரை எழுதியிருந்தேன். அப்பொழுது ஜெய்பீம் இத்தனை சவால்களைச் சந்தித்திருக்கவில்லை. மிகவும் ஒடுக்கப்பட்ட மக்கள் பற்றியும், அந்த அடக்குமுறையின் கோரமுகம் பற்றியும் பேசிய ஜெய்பீம் படத்தைச் சனாதன சக்திகள் எதிர்க்கும் என்பது பொதுவாக எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான். ஆனால், தீச்சட்டியை ஏந்திக் கொண்டு வருவார்கள் என்பதை பலர் எதிர்பார்த்திருக்கவில்லை.

ஜெய்பீம் படத்திற்கு முதலாவது எதிர்ப்பு ஆரிய இந்துத்துவ மேலாதிக்க சக்திகளிடம் இருந்து வந்தது. படத்தில் ஒரு காட்சி இருக்கிறது. காவல்துறை அதிகாரியாக நடிக்கும் பிரகாஸ்ராஜ், ஒரு சேட்டுவிடம் விசாரணை செய்வார். சேட்டு ஹிந்தியில் பதில் சொல்லத் தொடங்க, பிரகாஸ்ராஜ் ஓங்கி ஒரு அறை விடுவார். தமிழில் சொல் என்று அதட்டுவார். சேட்டு அதன் பிறகு நல்ல தமிழில் பதில் சொல்வார். ஜெய்பீம் மொழி மாற்றம் செய்யப்பட்ட தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற மொழிகளிலும் இதே காட்சி இருக்கிறது. அங்கே அந்த அந்த மொழிகளில் பேசும்படி அறை விழும். எல்லா இடங்களிலும் இந்தக் காட்சி பெரும் வரவேற்பை பெற்றது.



இந்தக் காட்சி ஹிந்தியைத் திணிக்க விரும்பும் மேலாதிக்க சக்திகளுக்கும், அவர்களுக்கு அடிமைச் சேவகம் செய்பவர்களுக்கு கோபத்தை ஏற்படுத்தியது. ராஜ்கண்ணுவுக்கு நடந்த சித்திரவதையையும், கொலையையும் அவர்கள் கடந்து போனார்கள். சேட்டுவுக்கு விழுந்த அறைதான் அவர்களுக்கு வலித்தது. உடனடியாக இந்த காட்சியைக் கண்டித்து அறிக்கை விட்டார்கள். ஆனால் அது மக்களிடம் எடுபடவில்லை.

தொடர்ச்சியாக ஒடுக்கப்பட்ட மக்களின் குரல்களைப் பதிவு செய்கின்ற படங்கள் வெளிவருவதை இந்தச் சக்திகள் விரும்பவில்லை. ஆகவே வேறு ஏதாவது சர்ச்சையான விடயங்கள் படத்தில் இருக்கிறதா? என்று பூதக் கண்ணாடி வைத்து தேடினார்கள். அவர்களின் கண்களில் அக்கினிச்சட்டியுடன் கூடிய ஒரு நாட்காட்டி கண்ணில் பட்டது. படத்தில் ராஜ்கண்ணுவையும், அவருடைய உறவினர்களையும் சித்திரவதைச் செய்கின்ற காவல் அதிகாரியின் வீட்டில் அந்த நாட்காட்டி மாட்டப்பட்டிருந்தது.

தேர்தலில் தொடர் தோல்விகளைச் சந்தித்து வருகின்ற பாட்டாளி மக்கள் கட்சி, இதை ஒரு சர்ச்சை ஆக்கும் நோக்கத்தோடு களத்தில் இறங்கியது. குறிப்பிட்ட காவல்துறை அதிகாரி வேறு ஒரு சமூகத்தவராக இருக்கின்ற பொழுது, அவரை வேண்டும் என்றே வன்னிய சமூகத்தவராக சித்தரித்திருக்கிறார்கள் என்று பிரச்சனையை அன்புமணி ராமதாஸ் கிளப்பினார். படத்தின் நடிகரும், தயாரிப்பாளருமான சூர்யாவிற்குக் கடிதம் எழுதினார். ஆனால், அதற்கு முன்னரே படத்தில் அந்தக் காட்சி மாற்றப் பட்டிருந்தது. அப்படி இருந்தும் பாட்டாளி மக்கள் கட்சி இதை ஒரு பெரியப் பிரச்சனையாக மாற்றுவதற்கு எல்லா முயற்சிகளையும் எடுத்தது.

என்னைக் கேட்டால் அந்தக் காட்சியைப் படத்தில் மாற்றி இருக்கவே கூடாது என்பேன். ராஜ்கண்ணு மீது பொய்க் குற்றம் சாட்டியவர் வன்னிய சமூகத்தைச் சேர்ந்தவர் என்று தகவல்கள் சொல்கின்றன. அன்றைக்கு இந்தப் பிரச்சனையைக் கம்யூனிஸ்ட் கட்சியினர் வெளியில் கொண்டு வந்து, பெரும் போராட்டம் செய்த பொழுது, ஆரம்பத்தில் கலந்து கொண்ட பாட்டாளி மக்கள் கட்சி, பின்னர் ஒதுங்கிக் கொண்டதோடு, போராடிய வன்னிய சமூகத்தைச் சேர்ந்தவர்களை விலகிக் கொள்ளும்படி அழுத்தம் கொடுத்ததாகவும் தகவல்கள் இருக்கின்றன.

சாதிச் சங்கத்தினர் நாட்காட்டிகளைத் தயாரிக்கின்ற போது, தமது சமூகத்து மக்களுக்கு மட்டும் அந்த நாட்காட்டியை







கொடுப்பது இல்லை. தம்மோடு இணக்கமாக செயற்படுகின்ற அரச அதிகாரிகளுக்கும் கொடுப்பார்கள். அந்த வகையில் அக்கினிச்சட்டியுடன் கூடிய அந்த நாட்காட்டி ஒரு கொடூரமான காவல்துறை அதிகாரி வீட்டில் தொங்குவது அப்படி ஒன்றும் தவறான விடயம் அல்ல.

அப்படி இருந்தும் பிரச்சனையைத் தவிர்க்க வேண்டும் என்பதற்காக அந்தக் காட்சி மாற்றப்பட்டது. ஆனால் சாதிய, இந்துத்துவ சக்திகள் அதை ஏற்றுக் கொள்ளமால், பிரச்சனை செய்து கொண்டிருக்கின்றன. இவர்களின் உண்மையான பிரச்சனை அக்கினிச்சட்டி இல்லை. ஒடுக்கப்பட்ட மக்களின் கதையை படம் அப்பட்டமாகப் பேசுகிறது என்பதே அவர்களின் பிரச்சனை.

இதே வேளை இன்னும் ஒன்றைச் சொல்ல வேண்டும். அக்கினிச்சட்டி என்பது வன்னிய மக்களின் சின்னம் அல்ல. அது வன்னியர் சங்கம் என்கின்ற சாதிய அமைப்பின் சின்னமாக மட்டுமே இருக்கிறது. இந்த அக்கினிச்சட்டிக்குப் பின்னால் வினோதமான கதை ஒன்று இருக்கிறது.

முன்னர் வாதாபி என்கின்ற ஒரு அசுரன் தேவர்களை துன்புறுத்தினானாம். வாதாபியும் அவனுடைய தம்பியான வில்வலனும் இணைந்து முனிவர்களைத் தந்திரமாக கொலை செய்து வந்தார்கள். வில்வலன் ஒரு ஆடாக மாறுவான். வாதாபி முனிவர்களை அழைத்து அந்த ஆட்டை வெட்டி அவர்களுக்கு சாப்பிடக் கொடுப்பான். முனிவர் அந்த ஆட்டை சாப்பிட்டவுடன் வாதாபி வில்வலனை அழைப்பான். வில்வலன் முனிவரின் வயிற்றைக் கிழித்துக் கொண்டு வெளியில் வருவான். முனிவர் இறந்து விடுவான். ஆனால், அகஸ்தியரிடம் இந்தத் திட்டம் பலிக்கவில்லை. அவர் வில்வலனை சீரணம் ஆக்கி விடுவார். அதன் பிறகு கோபம் கொண்ட வாதாபி கடுமையான தவம் செய்து, பல்வேறு வரங்களைப் பெற்று தேவர்களையும், முனிவர்களையும் கடுமையாகத் துன்புறுத்தினான்.

பின்னர் முனிவர் ஒருவர் யாகத்தில் இருந்து ஒரு வீரன் வாளோடும், குதிரையோடும் தோன்றினான். அவனுடன் வேறு பல வீரர்களும் தோன்றினார்கள். நெருப்பில் இருந்து தோன்றிய அந்த வீரன் வாதாபியை வதம் செய்தான். அந்த வீரனும் நாராயணனின் ஒரு வடிவம் என்று புராணங்கள் சொல்கின்றன.

வட மொழியில் வஹ்னி என்றால் நெருப்பு என்று பொருள். வஹ்னியில் இருந்து அந்த வீரன் தோன்றியதால் வஹ்னி மகாராஜா என்று அவன் அழைக்கப் பட்டான். வஹ்னி என்கின்ற வட சொல் தமிழில் வன்னி என்று திரிபடைந்ததாகவும், அந்த மன்னனின் வழித்தோன்றல்களே வன்னியர்கள் என்று வன்னிய சங்கம் சொல்கிறது. அதனாலேயே அக்கினிச் சட்டியைத் தனது சின்னமாக அது வைத்திருக்கிறது.

அறிவுக்கு உட்படாத இத்தகைய புராணக்கதைகளைத் தமிழர்களில் ஒரு பிரிவினர் தமது வரலாற்றிற்கான அடிப்படையாக கொள்வதும், தமக்கான சின்னங்களை அவற்றில் இருந்து பெறுவதும், பின்னர் அவற்றை வைத்து பிரச்சனைகளை உருவாக்குவதுமான செயற்பாடுகள் இன்றைய நவீன காலத்திலும் நடக்கிறது என்பது பெரும் மன வருத்தத்தை தருகிறது.

CENTURY
TRAVELS GMBH

Rheinische Strasse 29
44137 Dortmund

15 YEARS OF SERVICE

Qatar Airways



Hotel ( Level 1 Certified )
Corona schutz ( Insurance)
Transfer to Hotel
PCR -Test
ETA Visa

40kgs

**Frankfurt to Colombo**

**ab695€**

இலங்கையின்
எந்தப் பகுதிக்கும்
வாகன வசதி
செய்து தரப்படும்.





அனைத்து வசதிகளுடன்...

Fon : 0231 5574 319
Fon : 0231 5896 557
Mob : 017621682149

பொங்கல் செய்ய
தேவையான 16
பொருட்கள் அடங்கிய
பொங்கல் பானை செட்
இலவசம்

V BOX

Variety of
Entertainment

## பொங்கலை முன்னிட்டு V BOX வாங்கும்
## அனைவருக்கும் பொங்கல் பானை செட் இலவசம்







**PONGAL PAANAI SET**

# FREE

## REACH OUR DISTRIBUTORS

**OFFICE :**
0044 2037 690498

**UK :**
0044 7882274040
0044 7723229209

**SWISS :**
0041 4455 14321

**NETHERLANDS, BELGIUM, LUXEMBOURG :**
0031 621604168

**FRANCE :**
0033 782775490
0033 977195911

**GERMANY :**
0049 17670334213,
0049 62063052893

**ITALY :**
0039 3510257812

**DENMARK :**
0045 20829548
0045 20718780